வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu — ඊළනාඩු

Email : eelanaduweekly@gmail.com

மலர் : 05 | 11.07.2024 வியாழக்கிழமை | இதழ் : 193 | பக்கங்கள் : 12




மாருதி Money Exchange (Pvt) Ltd.

இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 021 221 4433
076 284 4443

இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06

T.P: 011 236 2086

இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.


MoneyGram money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்

Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்

WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

# தொடரும் பணிப்புறக்கணிப்புகள் மற்றோர் 'அறகலய'வின் ஆரம்பம்!

## பாராளுமன்ற எரிப்புக்கும் வழிவகுக்கலாம் என்று அச்சம் வெளியிடுகின்றது அரசாங்கம்!



கொழும்பு, ஜூலை 11

நிலவும் வேலை நிறுத்த போராட்டங்கள் நாட்டை சீர்குலைக்கும் மீண்டுமோர் "அறகலய"வின் ஆரம்பமாக இருக்கலாம். இது பாராளுமன்றத்தை எரிப்பதில் நிறைவடையலாம் - இவ்வாறு அச்சம் வெளியிட்டுள்ளார் அரசாங்க பேச்சாளரும் போக்குவரத்து அமைச்சருமான பந்துல குணவர்த்தன.

பாராளுமன்றில் நேற்று அவர் ஆற்றிய உரையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தனது உரையில் தெரிவித்தவை வருமாறு,

"இன்று நிலவும் வேலை நிறுத்தங்கள், பாராளுமன்றத்தை எரிப்பதில் நிறைவடையும் - நாட்டை ஸ்திரமின்மைக்கு

11

## சஜித்துடன் இணைகிறார் டலஸ் அழகப்பெரும!



கொழும்பு, ஜூலை 11

சுதந்திர மக்கள் சபையின் பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணையத் தீர்மானித்துள்ளார்.

சுதந்திர மக்கள் சபையின் பல உறுப்பினர்கள் ஏற்கனவே ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து பணியாற்றி வருகின்றனர்.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ், பாராளுமன்ற உறுப்பினர் நாலக கொடஹேவா உட்பட டலஸுடன் கடந்தகாலத்தில் இணைந்து செயல்பட்ட சில பாராளுமன்ற உறுப்பினர்கள் சஜித் பிரேமதசவுக்கு நேரடியாக ஆதரவு வழங்கியுள்ளனர்.

டலஸ் அழகப்பெரும மாத்திரம் தனியாகச் செயல்பட்டு வந்தார். ஐக்கிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தில் பிரதமர் பதவி வழங்கவேண்டு மென்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் கூட்டணியில் பிரதித் தலைவர் பதவியை வழங்கவேண்டுமென்றும் டலஸ் அழகப்பெரும கோரிக்கைகளை

11

## பாராளுமன்ற குழு தலைவரை எம். பிக்களே தீர்மானிப்பார்கள்!

### இலங்கை தமிழ் அரசுக் கட்சி

யாழ்ப்பாணம், ஜூலை 11

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவர் தொடர்பில் பாராளுமன்றக் குழு தீர்மானிப்பதே பொருத்தமானது - இவ்வாறு கூறியுள்ளார் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்

11

## சிறார் இல்லங்கள் சட்டத்தை பின்பற்றுவதை உறுதி செய்க

### வடக்கு ஆளுநர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜூலை 11

வடக்கு மாகாணத்தில் இயங்கும் அனைத்து சிறுவர் இல்லங்களும் உரிய ஒழுங்கு விதிகள் மற்றும் சட்டவரையறைகளை பின்பற்றி இயங்குவதை உறுதிப்படுத்துமாறு வடக்கு ஆளுநர் அறிவுறுத்தியுள்ளார்.

தெல்லிப்பழையில் இயங்கும் சிறுவர், மகளிர் இல்லங்கள் தொடர்பில் கிடைத்த

11

## ஜனாதிபதி தேர்தல் குறித்து இன்று சபையில் விவாதம்!

கொழும்பு, ஜூலை 11

ஜனாதிபதித் தேர்தலை உரிய காலப்பகுதியில் நடத்துவதன் அவசியம் தொடர்பான விவாதம் இன்று வியாழக்கிழமை பாராளுமன்றத்தில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்று நடைபெற்ற கட்சிகளின் தலைவர்கள் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார

11

### ஜனாதிபதியின் பதவிக்காலம்:

## அரசமைப்பு திருத்தச் சட்டமூலம் தயாரிக்க அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஜூலை 11

ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பில் அரசியலமைப்பின் 2 சரத்துகளில் குறிப்பிடப்பட்டுள்ள வருடங்களின் எண்ணிக்கையை திருத்தியமைப்பதற்காக அரசியலமைப்பு திருத்த சட்டமூலமொன்றை தயாரிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.


குறித்த யோசனை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நேற்றுமுன்தினம் முன்வைக்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் 30 (2) சரத்தில் ஜனாதிபதியின் பதவிக்காலம் 5 வருடங்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் 62 (2) சரத்திற்கமைய, பாராளுமன்றத்தின் பதவிக் காலம் 5 வருடங்களாகும்.

11

## கொக்குத்தொடுவாய் புதைகுழி; 3 மனித எச்சங்கள் அடையாளம்!



முல்லைத்தீவு, ஜூலை 11

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் மேலும் 3 மனித எலும்புக்கூட்டு எச்சங் கள் அடையாளம் காணப்பட்டன. நேற்று புதன்கிழமை நடத்தப்பட்ட அகழ்வாய்விலேயே இவை கண்டறியப்பட்டன.

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாயில் கண்டறியப்பட்ட மனிதப் புதைகுழியில் மூன்றாவது கட்டமாக

11

## ஜனாதிபதி தேர்தலை ஒத்திவைக்க சூழ்ச்சி!

### அரசாங்கத்தை சாடுகிறது பவ்ரல்

கொழும்பு, ஜூலை 11

ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைப்பதற்கு அரசாங்கம் புதிய சூழ்ச்சியை மேற்கொண்டுள்ளது என்று சுயாதீன தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் குற்றஞ்சாட்டியுள்ளது.

பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி நேற்று கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இந்தக்

11

### போராட்டத்தில் ஈடுபடாத

## ஆசிரியர்களுக்கும் சம்பளம் அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை 11

சுகயீன விடுமுறை போராட்டத்தில் ஈடுபடாத ஆசிரியர்களுக்கு சம்பளத்தை அதிகரிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது என்று அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

11

## புதிய பொருளாதார, அரசியல் முறைமை நாட்டுக்கு தேவை!

### தேரர்களின் வழிகாட்டலை கேட்கிறார் ஜனாதிபதி

கொழும்பு, ஜூலை 11

நாட்டில் புதிய பொருளாதார, அரசியல் முறைமைகள் விரைவில் உருவாக்கப்பட வேண்டும். நாட்டை புதிய பாதைக்கு கொண்டு செல்வதற்கு மகா சங்கத்தினரின் வழிகாட்டல்களும் ஆலோசனைகளும் மிகவும் முக்கியமானவை - இவ்வாறு 4 ஆயிரம் பிக்குகள் மத்தியில் தெரிவித்துள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

11

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

ஒருவன் ஒரு மரத்தை அறுத்துக் கொண்டிருந்தான். சாப்பாட்டு நேரம் வந்ததும் அறுத்த பிளவில் ஒரு சக்கையைத் திணித்து விட்டுச் சாப்பிடப் போனான்.

மரத்தின் மேலிருந்து இதைப் பார்த்துக் கொண்டிருந்த ஒரு குரங்கு, அவன் போனதும் கீழே இறங்கி வந்து சக்கையை ஆட்டி அசைத்துப் பிடுங்கியது.

சக்கை வெளியே வந்ததும் பிளவாய் இருந்த மரம் படீரென்று ஒன்று சேர்ந்தது. அந்தப் பிளவில் அகப்பட்டிருந்த குரங்கின் காலும், வாலும் நசுங்கிப் போயின.

விஷமம் செய்வது சுலபம், அதனால் ஏற்படும் கெடுதலில் இருந்து தப்புவது கடினம் என்பதைச் சுட்டிக்காட்டவே இந்தக் கதையைத் தந்தேன்.

இந்தப் பத்தியில் சில நாட்களுக்கு முன்னர் ஆறு. திருமுருகனார் பற்றி எழுதியிருந்தமை வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய பகுதியில் சிவபூமி அறக்கட்டளையால் நடத்தப்படும் சிறுவர் இல்லத்தை இழுத்து மூடுவதற்கு வடக்கு ஆளுநர் பணிப்புரை விடுத்தாரென ஒரு பத்திரிகையில் தலைப்புச் செய்தி வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியிருந்ததும் அதுதொடர்பாக ஆறு. திருமுருகனார், அந்தப் பத்திரிகை நிறுவனத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கக் கடிதம் அனுப்பியதும் வாசகர்கள் அறிந்தவைதான்.

இந்த விடயம் தொடர்பாக கம்பன் கழகத்தின் தலைவர் கம்பவாரிதி இ. ஜெயராஜ் ஒரு திறந்த கடிதத்தை அண்மையில் எழுதியிருந்தார்.

அந்தக் கடிதத்தை இந்த ஊர்க்குருவிக்கு அனுப்பியிருந்த நண்பர் ஒருவர், அதனை நிச்சயம் "ஈழநாடு" பிரசுரிக்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்திருந்தார். அனுப்பியவர் முக்கிய பிரமுகர் என்பதால், அதனை பிரசுரிப்பதில் உள்ள சிக்கல்களை எடுத்துச் சொல்வதற்காக அவருக்கு தொலைபேசியில் அழைப்பை எடுத்தேன்.

"ஒரு பத்திரிகை சம்பந்தப்பட்ட ஒரு விடயத்தை இன்னுமொரு பத்திரிகை வெளியிடுவது பத்திரிகை மரபல்ல - அது மரபை மீறியதாகிவிடும்" என்று அவருக்கு விளக்கமளித்தபோது அவர் அதனை ஏற்றுக்கொள்ளும் நிலையில் இல்லை.

"இது சாதாரண விடயமல்ல. இது ஓர் இனம் சார்ந்த - மதம் சார்ந்த விடயம். அதைவிட முக்கியமானது இரண்டு மதங்கள் இதில் சம்பந்தப்படுகின்றன. அதாவது சைவர்களால் நடத்தப்படுகின்ற ஒரு சிறுவர் இல்லத்தை மூடுவதற்கு இன்னுமொரு மதத்தவரான அதிகாரி உத்தரவிட்டிருக்கிறாரென செய்தி வெளியாகியமை பல சிக்கல்களை தோற்றுவித்திருக்கின்றது. எனவே, இதில் உள்ள உண்மை என்ன என்பதை ஒரு பொறுப்புள்ள ஊடகம் என்ற வகையில் நீங்கள் வெளியிடத்தானே வேண்டும்." என்று அவர் வைத்த கோரிக்கையும் நியாயமானதுதான்.

முதலாவது, ஆளுநர் அப்படி பணிப்புரை விடுக்கவில்லை என்பதும் அவர் விசாரணை நடத்துமாறு மட்டுமே பணித்தார் என்பதும் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியவை. அதைவிட முக்கியமானது, ஆளுநர் விசாரணை நடத்துமாறு வேறு சில சிறுவர் இல்லங்கள் பற்றியும் பணித்த போதிலும் இந்தச் சிறுவர் இல்லம் பற்றி மட்டுமே செய்திகள் வெளிவந்தன என்றும் மற்றையவை பற்றி யாரும் கண்டுகொள்ளவில்லை எனவும் அந்தப் பிரமுகர் விபரித்துக் கொண்டே போனார்.

அந்த பிரமுகர் ஜெயராஜின் திறந்த கடிதம் பற்றி பேசிய சில நிமிடங்களில் இன்னுமொரு நண்பர், அதே பத்திரிகையில் வெளியான மற்றுமொரு தலைப்பு செய்தியை அனுப்பியிருந்தார்.

யாழ்ப்பாணத்தில் எப்போதோ சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி நினைவுப்பேருரை நடைபெற்றதாகவும் அந்த நினைவுப் பேருரையில் பேசிய இந்து சமயப் பேரவையின் தலைவர், "நாவலர் பாரம்பரியத்தின் இறுதி விம்பமாக செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி திகழ்ந்து சைவத் தமிழ் உலகில் அழியாப்புகழ் பெற்றுவிட்டார். புகழுக்காக அலையும் உலகில் தங்கம்மா அப்பாக்குட்டி கறைபடியாக்கரங்களுடன் பணியாற்றிய இரும்புப் பெண்" என்று புகழாரம் சூட்டியிருந்தார்.

இதுவே நண்பர் அனுப்பிய செய்தியின் முதலாவது வசனம்.

அந்த நண்பரிடமே கேட்டேன், "இதில் ஒன்றும் தவறாக இல்லையே. சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார், அவர் சொல்கின்ற அத்தனை சிறப்புகளுக்கும் சொந்தக்காரர் தானே" என்று கேட்டேன்.

அதைவிட இன்னுமொரு விடயத்தையும் நண்பருக்கு சொல்ல வேண்டியிருந்தது. அதாவது, சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார் இருந்த போதும் அவரின் சேவையிலும் பிழை கண்டுபிடித்த "பண்டிதர்கள்" இருக்கவே செய்தனர்.

அதுவல்ல இன்று நாம் இங்கே சொல்ல வருவது,

இன்றைய இந்தச் செய்தி எப்போது நடந்தது என்றே தெரியவில்லை. அதைவிட பழைய செய்தி ஒன்றை பத்திரிகைகள் தாமதமாக வெளியிடுகின்றபோது இவ்வாறு தலைப்பு செய்தியாக போடுவது மரபல்லவே என்றார் அதனை அனுப்பியிருந்த நண்பர்.

ஒரு பத்திரிகை இன்று கிடைக்கின்ற செய்திகளில் தலைப்புச் செய்தியாக வெளியிடுவதற்கு பொருத்தமான செய்திகள் கிடைக்காவிட்டால், தேடி எடுத்துப் போடுவது இயல்பானதுதான் என்றேன்.

"ஆனால், அதற்காக ஒருவரை 'அடிப்பதற்காக' துணைக்கு தான் அழைத்து வருகின்றவர் கறைபடியாதவராகவும் இருக்க வேண்டும். கைதடியில் தாங்கள் நடத்திவந்த சிறுவர் இல்லத்தில் நடந்த முறைகேடுகளுக்காக அந்த இல்லத்தையே மூடியவர்களைக் கொண்டு, இன்னுமொரு சிறுவர் இல்ல செய்திக்கு பதில் சொல்வது தான் சரியானதாகத் தெரியவில்லை" என்றார் நண்பர்.

மேலேயுள்ள கதையில் குரங்கின் நிலைதான் ஞாபகத்துக்கு வந்தது.!

- ஊர்க்குருவி.

## 28 கிலோ கேரள கஞ்சாவுடன் இருவர் வவுனியாவில் கைது!

வவுனியா, ஜூலை 11

வவுனியா நகரில் 28 கிலோ கேரள கஞ்சாவுடன் இருவர் நேற்று புதன்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்டனர்.

நீர்கொழும்பு பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவல் வவுனியா பொலிஸாருக்கு வழங்கப்பட்டது.

இதையடுத்து மன்னாரிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த கூலர்ரக வாகனம் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

இதன்போது, 28 கிலோ 750 கிராம் கேரள கஞ்சாவை வவுனியா பொலிஸார் பறிமுதல் செய்தனர். அத்துடன், மன்னார் - பேசாலையை சேர்ந்த 30, 27 வயது சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டனர்.

கைதான இருவரையும் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## அறநெறி பாடசாலைகளுக்கு சந்நிதியான் ஆச்சிரமம் உதவி



வடமராட்சி, ஜூலை 11

வவுனியா - செட்டிக்குளம் - மெனிக்பாம் பகுதியில் அமைந்துள்ள அறநெறி பாடசாலையின் 75 மாணவர்களுக்கு சீருடை துணிகள் சந்நிதியான் ஆச்சிரமத்தால் வழங்கப்பட்டன.

கணேசபுரம் திருமூலர் அறநெறிப் பாடசாலை மற்றும் நெடுங்கேணி - பழம்பாசி முத்துமாரி அம்மன் அறநெறி பாடசாலை மாணவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட சீருடை துணிகளுக்கான தையல் கூலிக்கான தொகையும் வழங்கப்பட்டது.

இந்த உதவித் திட்டங்களை ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாக சென்று வழங்கி வைத்தார். (ஐ-02)

## ஜூலை 8,9 தினங்களில் கடமையாற்றிய அரச அதிகாரிகளுக்கு விசேட சம்பளம்!

### ஜனாதிபதி அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 11

ஜூலை 08 மற்றும் 09 ஆகிய இரு தினங்களில் கடமையாற்றிய அரச அதிகாரிகளுக்கு விசேட சம்பள அதிகரிப்பை வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, எதிர்கால பதவி உயர்வுகளுக்காக அந்த அதிகாரிகளுக்கு பாராட்டுச் சான்றிதழ் வழங்குவதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நேற்று முன் தினம் அமைச்சரவையில் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

## வவுனியாவில் வாடகைக்கு அமர்த்திய ஹைஏஸ் வாகனத்தில் மாடு கடத்தல்!

வவுனியா, ஜூலை 11

வவுனியாவில் வாடகைக்கு அமர்த்திய ஹைஏஸ் ரக வாகனத்தில் மாட்டை கடத்தியவர் வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

வவுனியா, பாவற்குளம் பகுதியைச் சேர்ந்த சிலர் ஆச்சிபுரம் பகுதியில் ஹைஏஸ் வாகனம் ஒன்றினை வாடகைக்கு பெற்றதுடன், குறித்த வாகனத்தில் கோவில் குளம் பகுதியில் இருந்து இரு மாடுகளை கடத்தியுள்ளனர்.

மாடுகளுடன் சென்ற வாகனம் விபத்துக்குள்ளானதால் குறித்த வாகனத்தை வாகன திருத்தகம் ஒன்றில் நிறுத்தி விட்டு இரு மாடுகளையும் இறைச்சிக்காக விற்றுள்ளனர்.

மாடு கடத்தப்பட்டமை தொடர்பில் வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து, தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜெயக்கொடி வழிகாட்டலில் பொலிஸ் குழுவினர் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

மாடுகளை கடத்திய பிரதான சந்தேக நபர் கைது செய்யப்பட்டதுடன், விபத்துக்குள்ளான வாகனமும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## பெருந்திருவிழா சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூலை 11

வேலணை - சரவணை - தேவபுரம் கதிர்வேலாயுத சுவாமி திருக்கோயில் வருடாந்த பெருந்திருவிழாவை முன்னிட்டு சிறப்புச் சொற்பொழிவு நடைபெறவுள்ளது.

ஆலயத்தின் பிரதான மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை தினமும் மாலை 6.00 மணிக்கு சிவநெறிபிரகாசர் கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இந்த சொற்பொழிவு நடைபெறும்.

இதில், சைவப்புலவர்கள் சி. கா. கமலநாதன், செ. த. குமரன், ச. முகுந்தன், பொன். சந்திரவேல், கந்த. சத்தியதாசன், இளம் சைவப்புலவர்கள் ச. நவநீதன், நித்திலவாசன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர். (ஐ)

## சிந்தனை அமர்வு

யாழ்ப்பாணம், ஜூலை

"யோகம் தரும் நல்வாழ்வு" பற்றிய சிறப்பு சிந்தனை அமர்வு நாளை மறுதினம் சனி மற்றும் ஞாயிறுக்கிழமைகளில் காலை 6 மணி தொடக்கம் 8 மணி வரை நடைபெறவுள்ளது.

நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் நடைபெறும் இந்த அமர்வில் டாக்டர் எஸ். பாலசுப்பிரமணியம் போதனை வழங்குவார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
11.07.2024 வியாழக்கிழமை
குரோதி வருடம், ஆனி 27

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# பா. ஜ. கவால் என்ன செய்துவிட முடியும்?

பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாடு தலைவர் அண்ணாமலை தமிழ் அரசுக் கட்சியின் மூத்த தலைவர் இரா. சம்பந்தனின் இறுதி நிகழ்வில் பங்கு கொள்வதற்காக திருகோணமலை வந்திருந்தார். ஒப்பீட்டடிப்படையில் இரா. சம்பந்தன் பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாடு தலைவர்களுடன் நெருக்கமான தொடர்பைப் பேணியவரல்லர். திராவிட கட்சித் தலைவர்களுடன்தான் சம்பந்தன் தொடர்புகளை பேணியிருக்கின்றார். சம்பந்தன் மட்டுமல்ல, பொதுவாகவே ஈழத்தமிழ் அரசியல்வாதிகள் தமிழ்நாட்டின் திராவிட கட்சிகளுடன்தான் நெருங்கிய தொடர்பை பேணிவந்திருக்கின்றனர்.

பாரதிய ஜனதா கட்சி ஆட்சியை கைப்பற்றியதில் இருந்துதான் அவர்களை நோக்கியும் சில ஈழ அரசியல்வாதிகள் திரும்பியிருந்தனர். குறிப்பாக, இந்துத்வா சக்திகளுடன் தொடர்புகளை பேணுவதன் ஊடாக இந்திய மத்திய அரசுடன் நெருங்கலாம் என்றவாறான பார்வைகளும் ஈழ அரசியலுக்கு அறிமுகமாகின. இந்தப் பின்னணியில்தான் காசி ஆனந்தன் போன்றவர்கள் இந்துத் தமிழீழம் என்றெல்லாம் உச்சரிக்கத் தொடங்கினர். இது சரியான பார்வையல்ல - மிகவும் தவறான பார்வையென்பது ஏற்கனவே நிரூபிக்கப்பட்டுவிட்டது.


இவ்வாறானதொரு பின்புலத்தில்தான், பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாடு தலைவர்கள் பலரும் ஈழத் தமிழ் அரசியல்வாதிகளுடன் நெருக்கத்தைப் பேணிக்கொள்ளத் தொடங்கினர். அத்துடன், ஈழத்தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கு ஆதரவான நிலைப்பாட்டை வெளிப்படுத்தி வருகின்றனர். பாரதிய ஜனதா கட்சி என்னதான் மத்தியில் பலமாக இருந்தபோதிலும்கூட (தற்போது அந்த நிலைமை இல்லை) தமிழ்நாட்டுக்குள் திராவிட செல்வாக்கை சரிப்பதில் இன்று வரையில் வெற்றியை பெற முடியவில்லை. அண்ணாமலை போன்றவர்கள் பல முயற்சிகளை மேற்கொண்டபோதிலும்கூட அது கைகூடவில்லை. அவர் தோல்வியைத் தழுவியிருந்தார்.

இவ்வாறானதொரு பின்புலத்தில் திராவிட கட்சிகளை சேர்ந்தவர்கள் எவரும் இரா. சம்பந்தனின் இறுதி நிகழ்வில் பங்குகொள்ளாத போதிலும்கூட அண்ணாமலை பங்கு கொண்டிருந்தார். தமிழ்நாட்டுக்குள் ஆழக்காலூன்றும் தங்களின் அரசியல் நகர்வுகளுக்கு ஈழத் தமிழர் ஆதரவு நிலைப்பாட்டை பயன்படுத்திக் கொள்ளலாம் என்றே பாரதிய ஜனதா கருதுகின்றது. அண்ணாமலையை தமிழ் அரசுக் கட்சியினர் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தனர். அவர் முன்னரும் தமிழ் அரசியல் கட்சிகளை சந்தித்து கலந்துரையாடி இருக்கின்றார்.

பாரதிய ஜனதா கட்சியிடம் முறையிடுவதால் தமிழ் மக்களின் அரசியலில் முன்னேற்றங்கள் ஏற்படுமா? யுத்தம் முடிவுற்று - கடந்த பதினைந்து வருடங்களில் இவ்வாறான நம்பிக்கைகளுடனும் எதிர்பார்ப்புகளுடனும்தான் ஈழத் தமிழ் மக்களின் அரசியல் முன்னெடுக்கப்பட்டிருந்தது. ஆனால், எந்தவோர் அரசியல் முன்னேற்றங்களையும் காணமுடியவில்லை.

ஏன்? பதில் சுலபமானது - அதாவது, மற்றவர்களிடம் முறையிடுவதற்கு முன்னர் ஈழத்தமிழ் மக்கள் ஒரு தேவையுள்ள மக்கள் - அவர்களை தவிர்த்து செல்லக்கூடாது - முடியாது என்னும் பார்வை வெளியாரிடம் ஏற்பட வேண்டும். கடந்த பதினைந்து வருடங்களில் அவ்வாறானதொரு நிலைமையை ஏற்படுத்துவதற்கு ஈழத்தமிழ் தலைமைகள் என்போரால் முடியவில்லை. இந்த நிலையில் பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாடு தலைவர் அண்ணாமலையை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருப்பதில் எந்தவொரு பயனும் இல்லை. அண்ணாமலையின் கையில் எதுவுமில்லை.

# உயிரிழந்த வர்த்தகர்களுக்கு அஞ்சலி



முல்லைத்தீவு,ஜூலை 11

புதுக்குடியிருப்பு வர்த்தக சங்கத்துக்குட்பட்ட பகுதியில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு உயிரிழந்த வர்த்தகர்களை நினைவு கூரும் விதமாக புதுக்குடியிருப்பு பகுதியில் நேற்று புதன்கிழமை அஞ்சலி நிகழ்வொன்று நடைபெற்றது.

இந்த நிகழ்வில் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் வர்த்தகத்தை மேற்கொண்டு உயிரிழந்த 15 வர்த்தகர்களின் படங்கள் வைக்கப்பட்டு அவர்களுக்கு ஈகைச் சுடர் ஏற்றப்பட்டு மலர் மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

உயிரிழந்த வர்த்தகர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், புதுக்குடியிருப்பு வர்த்தக சங்க நிர்வாக உறுப்பினர்கள், வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்டோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தியமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# வேலைநிறுத்தத்தினால் ஏற்பட்ட சிக்கல் தேங்கிக்கிடக்கும் 12 இலட்சம் கடிதங்கள்

கொழும்பு, ஜூலை 11

தபால் ஊழியர்களின் வேலைநிறுத்தம் காரணமாக மத்திய தபால் பரிவர்த்தனை மற்றும் ஏனைய தபால் நிலையங்களில் கிட் டத்தட்ட 12 இலட்சம் கடிதங்கள் மற்றும் பொதிகள் தேங்கிக் கிடப்பதாக தபால் தொழிற் சங்கம் தெரிவித்துள்ளது.

மத்திய தபால் பரிமாற்றத்தில் சுமார் 07 இலட்சம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தபால் பொதிகள் சிக்கியுள்ளதாக ஒன்றிணைந்த தபால் தொழிற் சங்கத்தின் இணை ஏற்பாட்டாளர் சிந்தக பண்டார தெரிவித்தார்.

மூன்று கோரிக்கைகளை முன்வைத்து தபால் ஊழியர்கள் கடந்த இரு நாட்கள் தொடர்ந்து 48 மணிநேரம் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# 5 தேர்தல்களுக்கு போதுமான எழுதுபொருட்கள் கைவசம்!

## அரச அச்சகர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 11

ஐந்து தேர்தல்களுக்கு போதுமான எழுதுபொருட்கள் அரச அச்சகத்தின் வசமிருப்பதாக அரச அச்சகர் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தலுக்கான ஏற்பாடுகள் தொடர்பில் நேற்று முன் தினம் நடைபெற்ற கலந்துரையாடலின்போது அவர் இதனை கூறினார்.


பொலிஸ்மா அதிபர் மற்றும் தபால்மா அதிபர் ஆகியோரும் இதில் கலந்து கொண்டதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. கடந்த தேர்தல்களை விட இம்முறை அச்சிடும் செலவு 4 மடங்கு அதிகரிக்கும் என அரசாங்க அச்சகர் இதன்போது தெரிவித்துள்ளார். இதேவேளை, ஜனாதிபதி தேர்தலில் வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்ட திலிருந்து தேர்தல் முடியும் வரை அனைத்து பாதுகாப்பு ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படும் என பொலிஸ்மா அதிபர் இந்த கூட்டத்தில் தெரிவித்துள்ளார். இதனிடையே உத்தியோகபூர்வ வாக்குச் சீட்டு விநியோகம் உட்பட ஜனாதிபதி தேர்தல் தொடர்பான சகல நடவடிக்கைகளையும் தடையின்றி மேற்கொள்வதாக தபால்மா அதிபர் உறுதியளித்ததாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.எல். ரத்நாயக்க கூறியுள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் உள்ளிட்ட ஆவணங்களை அச்சிடும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அரச அச்சகர் தெரிவித்துள்ளார். அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதி தேர்தலுக்கான திகதியை அறிவிப்பதற்கான அதிகாரம் எதிர்வரும் 17ஆம் திகதிக்கு பின்னர் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு கிடைக்கும்.

அதற்கமைய, இம்மாத இறுதிக்கு முன்னர் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படும் திகதியை அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

(அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனி - 11 வியாழக்கிழமை
குரோதி வருடம் - ஆனி 27
நல்ல நேரம் : 10.30 - 12.30
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : சஷ்டி




**மேடம்**
புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். பிள்ளைகளின் உயர்கல்வி உத்தியோகம் குறித்து யோசிப்பீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**இடபம்**
எதிர்ப்புகள் அடங்கும். பழைய நண்பர்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். உத்தியோகத்தில் விமர்சனங்களையும் தாண்டி முன்னேறுவீர்கள். கவனம் தேவைப்படும்.

**மிதுனம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். உடன் பிறந்தவர்கள் உங்கள் நலனில் அக்கறை காட்டுவார்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும். வெற்றி பெறும் நாள்.

**கடகம்**
கடந்த 2 நாட்களாக கணவன்- மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். புதிய மாற்றம் ஏற்படும் நாள்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் நினைத்த வேகத்தில் சில வேலைகளை முடிக்க முடியாமல் தடை தாமதங்கள் ஏற்படும். அதிகாரி களால் அலைக்கழிக்கப்படுவீர்கள். விட்டுக்கொடுத்துச்செல்லவேண்டும்.

**கன்னி**
எதிர்காலம் பற்றிய கவலைகள் வந்து போகும். பிள்ளைகளை அன்பால் அரவணைத்துப் போங்கள். வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். மறைமுக எதிர்ப்புகள் வரக்கூடும்.

**துலாம்**
எதையும் சாதிக்கும் துணிச்சல் பிறக்கும். பெற்றோரின் ஆதரவு பெருகும். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். தலைமையின் நம்பிக்கையை பெறுவீர்கள்.

**விருச்சிகம்**
சொன்ன சொல்லை காப்பாற்றுவீர்கள். சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள். உத்தியோகத்தில் புதிய வாய்ப்புகள் தேடி வரும்.

**தனுசு**
இதுவரை இருந்த அலைச்சல் டென்ஷன் கோபம் யாவும் நீங்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். தள்ளிப்போன விஷயங்கள் எளிதில் முடியும். தொழில் உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் கொஞ்சம் அலைச்சலும் சிறுசிறு ஏமாற்றமும் வந்து நீங்கும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களிடம் கனிவாகப் பழகுங்கள். நிதானம் தேவைப்படும் நாள்.

**கும்பம்**
உங்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். பிள்ளைகளின் பொறுப்புணர்வு அதிகமாகும். மனைவி வழியில் நல்ல செய்தி உண்டு. கல்யாணப் பேச்சுவார்த்தை சுமுகமாக முடியும்.

**மீனம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். அரசால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் இரட்டிப்பு லாபம் உண்டு. உத்தியோகத்தில் அதிகாரிகள் புது பொறுப்பை ஒப்படைப்பார்.

# கள்ள சாராயத்தை கட்டுப்படுத்த திராணியற்ற தி. மு. க. அரசாங்கம்

## எடப்பாடி பழனிசாமி சாடல்

சென்னை, ஜூலை 11

"புதுச்சேரியிலிருந்து கொண்டுவரப்பட்ட சாராயம் அருந்திய 7 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர் என்ற செய்தி கவலையளிக்கிறது. அதிகாரிகளை மட்டும் மாற்றிவிட்டால் பிரச்னை தீர்ந்துவிடும் என்று தி. மு. க. முதல்வர் செயல்படுவது எந்த பலனும் அளிக்காது. அடிப்படை நிர்வாக சீரமைப்பில் கவனம் செலுத்தாமல் கள்ள சாராய புழக்கத்தை கட்டுப்படுத்தத் திராணியற்ற தி. மு. க. அரசுக்கு எனது கடும் கண்டனம்" என்று அ. தி. மு. க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் தளத்திலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

மேலும், மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுவோருக்கு உரிய சிகிச்சை அளிக்கவும், அயல் மாநில சாராயங்கள் புழங்குவதை தடுப்பது அரசின் கடமை என்பதை உணர்ந்து, எல்லைகளில் மதுவிலக்கு சோதனைகளை தீவிரப்படுத்தவும் தி. மு. க. முதல்வரை வலியுறுத்துகிறேன்," என்று அவர் பதிவிட்டுள்ளார். (ஐ)

# தி. மு. வின் அமைப்பு செயலர் மீது அண்ணாமலை மானநஷ்ட வழக்கு

சென்னை, ஜூலை 11

"கள்ளக்குறிச்சி கள்ளச் சாராய உயிரிழப்புகளுக்கு நான் தான் காரணம் என்று கூறியுள்ள ஆர். எஸ். பாரதிக்கு எதிராக நீதிமன்றத்தில் மானநஷ்ட வழக்கு தொடர்ந்துள்ளேன். ஒரு கோடி ரூபாய் நஷ்டஈடு கோரியுள்ளேன். ஆர்.எஸ்.பாரதியிடம் இருந்து பெறப்படும் ஒரு கோடி ரூபாயைக் கொண்டு கள்ளக்குறிச்சியில் குடியால் பாதிக்கப்பட்டவர்களுக்கான முகாம் அமைக்க செலவிடப்படும்" என்று பா. ஜ க. தமிழ்நாடு தலைவர் அண்ணாமலை கூறியுள்ளார்.

நேற்று செய்தியாளர்களைச் சந்தித்த அவர் மேலும் கூறியவை வருமாறு,

"கள்ளக்குறிச்சியில், கள்ளச் சாராயம் அருந்தி கிட்டத்தட்ட 65 பேர் உயிரிழந்தனர். 23.06.24 அன்று தி. மு. க. அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஒரு செய்தியாளர்கள் சந்திப்பில், இந்த கள்ளச்சாராய உயிரிழப்புக்கு காரணம் நான். நான் ஏதோ சதி செய்து எங்கிருந்தோ கள்ளச் சாராயத்தைக் கொண்டு வந்து அதை கள்ளக்குறிச்சியில் கொடுத்ததால், அதனால் மக்கள் இறந்தனர் என்று ஆர்.எஸ். பாரதி குற்றம்சாட்டியிருந்தார். அவர் அவ்வாறு கூறியது எனக்கு மிகப் பெரிய துக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

இப்போது நான் அவதூறு வழக்கு தொடர காரணம், ஆர். எஸ்.பாரதியின் பேச்சு எல்லையெல்லாம் தாண்டி சென்றுவிட்டது. ஒரு மூத்தவர், தனது 80 வயதில் 60 ஆண்டுகால அரசியலை பார்த்திருக்கும் ஆர். எஸ். பாரதி தி. மு. கவின் காலம் முடிந்துவிட்டது என்பது முழுமையாக தெரிந்துவிட்ட பிறகு, அவர் வாயில் இருந்து பொய், அவதூறு பேச்சுகள் அதிகமாக வரத் தொடங்கியுள்ளது. அதன் வெளிப்பாடுதான், கள்ளச்சாராய உயிரிழப்புக்கு நான்தான் காரணம் என்ற வார்த்தையைப் பயன்படுத்தியுள்ளார் - என்றார்.

# விக்கிரவாண்டி இடைத்தேர்தல் மதியம்வரை 50 வீத வாக்கு பதிவு

விக்கிரவாண்டி, ஜூலை 11

விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் நேற்று மதியம் 1 மணி நேர நிலவரப்படி 50.95 சதவீத வாக்குகள் பதிவாகின. மொத்தமுள்ள 2.37 லட்சம் வாக்காளர்களில் 1.20 இலட்சம் பேர் வாக்களித்திருந்தனர்.


முன்னதாக, காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கியது. காலை 9 மணிநிலவரப்படி 13 சதவீதமாக இருந்த வாக்குப்பதிவு, 11 மணிநேர நிலவரப்படி 30 சதவீதமாக உயர்ந்தது.

காலை முதலே வெயிலையும் பொருட்படுத்தாமல் பொது மக்கள் நீண்டவரிசையில் நின்று வாக்களித்தனர்.

276 வாக்குப்பதிவு மையங்களிலும் வெப் கேமராக்கள் பொருத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகின்றன. இதில் 42 வாக்குப்பதிவு மையங்கள் பதற்றமானதாகவும் 3 மையங்கள் மிக பதற்றமானதாகவும் கண்டறியப்பட்டதால் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இத்தேர்தலில் போட்டியிடவில்லை என அ. தி. மு. க. ஒதுங்கிக் கொண்ட நிலையில், தி. மு. க., பா. ம. க., நாம் தமிழர் கட்சி என மும்முனை போட்டி நிலவுகிறது. (ஐ)

# வாக்குக்கு 6 ஆயிரம் ரூபாய் கொடுத்தார்கள் தி. மு. கவினர்



விழுப்புரம், ஜூலை 11

விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தலில் தி. மு. கவினர் வாக்காளர்களுக்கு ஒரு வாக்குக்கு ரூ. 6 ஆயிரம் கொடுத்தனர் என்று பா. ம. க. [illegible] குற்றம்சாட்டியுள்ளார்.

விக்கிரவாண்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினராக இருந்த புகழேந்தி கடந்த ஏப்ரல் மாதம் 6ம் தேதி உடல் நலக் குறைவால் காலமானார். இதையடுத்து விக்கிரவாண்டி தொகுதிக்கு நேற்று தேர்தல் நடந்தது.

இத்தேர்தலில் போட்டியிடவில்லை என அ. தி. மு. க. ஒதுங்கிக் கொண்ட நிலையில், தி. மு. க. , பா. ம. க., நாம் தமிழர் கட்சி என மும்முனை நிலவுகிறது. இந்த நிலையிலேயே இந்தக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

# விஷச் சாராய உயிரிழப்பு 66 ஆக உயர்வு!

கள்ளக்குறிச்சி, ஜூலை 11

கள்ளக்குறிச்சி விஷச்சாராய விவகாரத்தில் சிகிச்சை பெற்று வந்த ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இதன் மூலம் இந்த சம்பவத்தில் பலி எண்ணிக்கை 66 ஆக உயர்ந்துள்ளது.

கள்ளக்குறிச்சியில் சுமார் 229 பேர் கடந்த ஜூன் 18ஆம் திகதி மெத்தனால் கலந்த கள்ளச் சாராயம் அருந்தினர். இவர்கள், உடல்நிலை பாதிக்கப்பட்டு மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டனர்.

இவர்களில் 65 பேர் உயிரிழந்தனர். 8 பேர் தொடர் சிகிச்சையில் இருந்து வந்தனர். இதில் ஒருவரே நேற்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிச்சேவை கட்டமைப்பு பெரும் நெருக்கடிக்குள்!

## சபையில் நீதியமைச்சர் தகவல்



கொழும்பு, ஜூலை 11

**ஒரு சில நீதிபதிகளின் முறையற்ற செயற்பாடுகளினால் கௌரவமாக செயற்படும் பெரும்பாலான நீதிபதிகளின் புகழுக்கும் இழுக்கு ஏற்பட்டுள்ளது. நீதிச்சேவை கட்டமைப்பு பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளன. சபையில் நான் ஆற்றிய உரை தொடர்பில் ஊடக அறிக்கை வெளியிட்ட இரு நீதிபதிகளை தேவையாயின் பாராளுமன்ற சிறப்புரிமைகள் மற்றும் ஒழுக்கவியல் குழுவுக்கு அழையுங்கள் என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ சபாநாயகரிடம் வலியுறுத்தினார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நீதிச்சேவை கட்டமைப்பு குறித்து நான் ஆற்றிய உரை தற்போது பிரதான பேசுபொருளாக காணப்படுகிறது. எனது சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது என்பதை குறிப்பிட்டிருந்தேன். நான் கேள்விகளை முன்வைப்பதற்கு முன்னர் நீதிச்சேவை ஆணைக்குழு அதற்கு பதிலளித்துள்ளதற்கு மகிழ்ச்சியடைகிறேன்.

பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர கடந்த மாதம் 19 ஆம் திகதி நீதிமன்ற கட்டமைப்பு குறித்து முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையில் நான் பல விடயங்களை குறிப்பிட்டேன். பாராளுமன்ற உறுப்பினர்கள் நீதிச்சேவைகள் குறித்து நீதிமன்றத்திடம் கேட்க முடியாத விடயங்களை நீதியமைச்சரான என்னிடமே கேட்கிறார்கள். நான் அதற்கு பதிலளித்தேன்.

கல்கிசை நீதிமன்றத்தின் உத்தியோகபூர்வ இல்லத்துக்கு சட்டவிரோதமான முறையில் மின்சாரம் மற்றும் நீர் விநியோகம் பெற்றுக் கொண்ட நீதிபதி தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றன. இவ்விடயம் தொடர்பில் ஆராய்ந்து உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு நீதிச்சேவைகள் ஆணைக்குழுவிடம் வலியுறுத்தினேன். ஆனால் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

2022 முதல் 2024 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு பொருளாக வைக்கப்பட்டிருந்த 20 கோடி பெறுமதியான விஸ்கி போத்தல்கள் காணாமல்போனமை தொடர்பில் முறைப்பாடு கிடைக்கப் பெற்றன. நீதிமன்றத்தின் களஞ்சியசாலையின் கதவின் பூட்டை உடைத்து போத்தல்கள் திருடப்பட்டதாக குறிப்பிடப்பட்டது. ஆனால் பூட்டுக்கு பொருத்தமான வழமையான திறப்பினை கொண்டு கதவு திறக்கப்பட்டுள்ளதாக அரச பகுப்பாய்வாளர் அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

விஸ்கி போத்தல்கள் திருடப்பட்ட விவகாரத்தை மூடி மறைக்க நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் முயற்சிப்பதாக ஆணைக்குழுவின் பெரும்பாலானவர்கள் குறிப்பிடுகிறார்கள். இவ்விடயத்தை நான் பாராளுமன்றத்தில் குறிப்பிட்டதன் பின்னர் விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டு. பிரதான சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் ஹெரோயின், கஞ்சா, ஐஸ் போதைப்பொருள் பாவனையாளர்களுக்கு வழங்கப்படும் தண்டனை பற்றி குறிப்பிடப்பட்டது. அபாயகரமான போதைப்பொருட்களுக்கு 1000 ரூபா தண்டப்பணம் அல்லது பகல் 2 அல்லது 3 மணிக்கு பின்னர் விடுதலை என்ற நிலை காணப்பட்டது. கல்கிசை நீதிமன்றத்தில் இருந்து சட்டவிரோதமான முறையில் நீர் மற்றும் மின்சாரத்தை பெற்றுக் கொண்ட நீதிபதி தான் இவ்விவகாரத்திலும் தொடர்புப்பட்டுள்ளார்.

ஒரு சிலரது முறையற்ற செயற்பாடுகளினால் கௌரமாக செயற்படும் நீதிபதிகளின் புகழுக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் தான் நான் இவ்விடயங்களை பாராளுமன்றத்தில் குறிப்பிட்டேன். எனது உரைக்கு எதிராக நீதிச்சேவை சங்கத்தின் தலைவரான நீதிபதி ருவன் திஸாநாயக்க, செயலாளர் இசுறு நித்திகுமார ஆகியோர் எனக்கு எதிராக ஊடக அறிக்கை வெளியிட்டுள்ளார்கள்.


2010 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 01 ஆம் திகதி வெளியிடப்பட்ட 328 இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நீதிமன்ற சேவைகள் குறித்து விசாரணைகள் முன்னெடுக்கப்படும் போது வெளி தரப்பினர் அவ்விடயம் தொடர்பில் தமது தனிப்பட்ட நிலைப்பாட்டை வெளிப்படுத்த முடியாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தினதும் நீதிபதிகளினதும் சுயாதீனத்துக்காக நான் குரல் கொடுத்துள்ளேன். இதனை எதிர்க்கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். பாராளுமன்றத்தில் நான் குறிப்பிட்ட விடயங்கள் குறித்து அறிக்கை வெளியிட்ட இரண்டு நீதிபதிகளை பாராளுமன்ற சிறப்புரிமைகள் தொடர்பான குழுவுக்கு அழையுங்கள் என்று ஆரம்பத்தில் குறிப்பிட்டிருந்தேன்.

இவ்விடயம் குறித்து நீதிச்சேவைகள் ஆணைக்குழு பரிசீலனை அறிக்கை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்துள்ளது. ஆகவே அவசியமாயின் இவ்விரு நீதிபதிகளையும் சிறப்புரிமை குழுவுக்கு அழையுங்கள்-என்றார்.

(அ)

# மன்னார் பாலத்தடியில் மீண்டும் இராணுவ சோதனைச் சாவடி!



மன்னார், ஜூலை 11

மன்னாருக்குச் செல்லும் பிரதான பாலத்தடியில் சில வருடங்களாக காணப்பட்ட இராணுவ சோதனைச் சாவடி கடந்த சில வாரங்களுக்கு முன் அகற்றப்பட்ட நிலையில் தற்போது மீண்டும் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது.

கொழும்பு - அத்துருகிரிய பிரதேசத்தில், கடந்த 8 ஆம் திகதி இடம்பெற்ற படுகொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள், மன்னாருக்கு சென்று கடல் மார்க்கமாக இந்தியாவுக்குத் தப்பிச் செல்ல திட்டமிட்டுள்ளதாகப் புலனாய்வுத்துறை அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற ரகசியத் தகவலையடுத்தே குறித்த சோதனைச் சாவடி மீண்டும் அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# அரசமைப்புச் சட்டத்தின் பிரதிகளை பாடசாலை நூலகங்களுக்கு வழங்குக!

## கல்வி அமைச்சரிடம் சஜித் கோரிக்கை



கொழும்பு, ஜூலை 11

பிரபஞ்சம் திட்டங்களை முன்னெடுப்பதற்காக பாடசாலைகளுக்கு சென்றபோது, இங்கு பெரும் குறைபாடொன்றை காணக்கிடைத்தது. பாடசாலை நூலகங்களில் அரசியலமைப்புச் சட்டத்தின் பிரதிகள் இல்லை. அதுமட்டுமின்றி, அரசியலமைப்பு தொடர்பில் பிள்ளைகளுக்கு போதிக்கும் முறையொன்றும் இங்கு இல்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

எனவே அரசியலமைப்புச் சட்டத்தை அச்சிடுவதற்கு அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்தின் ஊடாக நடவடிக்கை எடுத்து பிரதிகளை பாடசாலை நூலகங்களுக்கு வழங்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் கல்வி அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தார்.

(அ)

# சிறிகொத்தவை கைப்பற்றும் எண்ணம் எமக்குக் கிடையாது!

## கூறுகிறார் ரஞ்சித் மத்தும பண்டார

கொழும்பு, ஜூலை 11

ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டணி அமைக்கும் எந்த எண்ணமும் இல்லை. சிறிகொத்தவை கைப்பற்றும் நோக்கமும் கிடையாது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையுடன் ஏற்பட்ட பிரச்னை காரணமாகவே புதியதொரு அரசியல் இயக்கத்தை கட்டியெழுப்பினோம். அதற்கு மக்கள் பேராதரவை வழங்கினர். எனவே, ஐ.தே.கவுடன் கூட்டு வைக்கும் திட்டம் இல்லை. அது ஒருபோதும் நடக்காது. ரணில் விக்கிரமசிங்க என்பவர் தற்போது மொட்டு கட்சியின் தலைவர்.

ஐக்கிய தேசியக் கட்சி தற்போது வங்குரோத்தடைந்துவிட்டது. எனவே, சிறிகொத்தவை கைப்பற்ற வேண்டிய தேவைப்பாடும் எமக்கு கிடையாது. சிறந்த மக்கள் இயக்கமொன்று எம் வசம் உள்ளது- என்றார்.

# ரஷ்ய-உக்ரைன் போர்முனையில் போரிடும் இலங்கையர்களை கண்டுபிடிப்பது கடினம்!

## இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய

கொழும்பு, ஜூலை 11

ரஷ்ய இராணுவத்துடன் இணைந்து உக்ரைனிற்கு எதிராக போரிடும் இலங்கையர்கள் குறித்து 464 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய தெரிவித்தார்.

பல இலங்கையர்கள் இந்தியா அல்லது மத்திய கிழக்கு ஊடாக வழமைக்கு மாறான பாதைகள் மூலம் ரஷ்யா சென்றுள்ளதால் போரிடுவதற்காக எத்தனை இலங்கையர்கள் ரஷ்யா சென்றுள்ளனர் என்பதை உறுதியாக தெரிவிக்க முடியாத நிலைமை காணப்படுகின்றது என அவர் கூறினார்.

இலங்கையிலிருந்து நேரடியாகச் சென்றவர்கள் குறித்த விவரங்களை பெறுவதும் கடினமாக உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

எனினும் 464 முறைப்பாடுகள் குறித்து ஆராய்ந்துவருகின்றோம் எனவும் அவர் தெரிவித்தார்.

ரஷ்யாவில் போரிட்ட வேளை உயிரிழந்தவர்களுக்கு இழப்பீடு வழங்கவேண்டும் என்ற கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என குறிப்பிட்டுள்ள இராஜாங்க அமைச்சர், ரஷ்யாவுக்கு செல்லும் இவர்கள் ரஷ்ய இராணுவத்துடன் இணைந்து போரிடுவது குறித்த ஆவணங்களில் கைச்சாத்திடுகின்றனர் என கூறினார்.

அவர்கள் இது குறித்து தாங்கள் அறியவில்லை என தெரிவித்தாலும் இந்த உடன்படிக்கைகள் சட்டபூர்வமானவை எனவும் அவர் தெரிவித்தார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துருகிரிய துப்பாக்கிச் சூடு;

# சந்தேகநபர்கள் இந்தியாவுக்கு தப்பிச் செல்வதற்கு முயற்சி!

கொழும்பு, ஜூலை 11

**அத்துருகிரிய பிரதேசத்தை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர்கள் தலைமன்னார் ஊடாக இந்தியாவுக்கு தப்பிச் செல்வதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதாக குற்றப்புலனாய்வுத் துறை அதிகாரிகளுக்கு இரகசிய தகவல் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

அத்துருகிரிய பிரதேசத்தில், 08 ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் 55 வயதுடைய பிரபல தொழிலதிபரான கிளப் வசந்த என்றழைக்கப்படும் சுரேந்திர வசந்த பெரேரா மற்றும் 38 வயதுடைய நபரொருவரும் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன் பிரபல பாடகியான கே.சுஜீவா உட்பட 4 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர். இந்த சம்பவத்துடன் தொடர்புடைய 7 சந்தேக நபர்கள் இதுவரையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பச்சை குத்தும் நிலையத்தின் உரிமையாளர் உட்பட 7 சந்தேக நபர்கள் மேல் மாகாணத்தின் தெற்கு பிராந்திய பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எனினும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர்கள் தலைமன்னார் ஊடாக இந்தியாவுக்குத் தப்பிச் செல்ல உள்ளதாக புலனாய்வுத்துறை அதிகாரிகளுக்கு இரகசிய தகவல் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து மன்னாருக்குச் செல்லும் பிரதான பாலத்தடியில் விசேட இராணுவ சோதனைச் சாவடி தற்போது அமைக்கப்பட்டுள்ளது.

அதற்கு அமைவாக வேறு மாவட்டங்களில் இருந்து மன்னாருக்குள் நுழைகின்ற சந்தேகத்திற்கு இடமான வாகனங்கள் சோதனைக்கு உட்படுத்தப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# இறுதி எச்சரிக்கையை விடுத்த வடிவேல் சுரேஷ்!

கொழும்பு, ஜூலை 11

"பெருந்தோட்ட நிறுவனங்களின் உரிமையாளர்களே, நீங்கள் மாறுங்கள் இல்லையேல் நாங்கள் உங்களை மாற்றுவோம்." - என்று பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாள் சம்பளமாக ஆயிரத்து 700 ரூபா வழங்கப்படவேண்டும் என வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது. ஆனால் அந்த வர்த்தமானி அறிவித்தலை எதிர்த்து பெருந்தோட்ட நிறுவனங்கள் போராடி வருகின்றன.

பெருந்தோட்ட நிறுவனங்களின் பொருளாதாரத்தை பலப்படுத்திக்கொண்டிருக்கும் தொழிலாளர்களுக்கான சாதாரண சம்பள உயர்வைக்கூட உயர்நீதிமன்றம்வரைசென்று தடுத்து நிறுத்தும் மனப்பான்மைதான் நிறுவனங்களிடம் காணப்படுகின்றன. இது மிகவும் கேவலமான-மக்களை அச்சுறுத்தும் நிர்வாகமாகும்.

பெருந்தோட்ட நிறுவனங்களின் உரிமையாளர்களே, நீங்கள் மாறுங்கள் இல்லையேல் நாங்கள் உங்களை மாற்றுவோம்.

பாட்டி வடை சுடும் கதை பழைய கதை. அது எங்களுக்கு தேவை இல்லை. தற்போதைய சூழ்நிலையில் வாழ்க்கைச் செலவுக்கேற்ப சம்பள உயர்வு அவசியம். அதற்காக ஜனாதிபதி தலைமையில் பேச்சு நடத்தகூட தயார். அவ்வாறு இல்லையேல் மக்கள் வஞ்சிக்காது, சில கசப்பான முடிவுகளை எடுக்க நேரிடும்-என்றார்.

# நெதர்லாந்திலிருந்து வந்த நாய் 7 குட்டிகளை ஈன்றது!

கொழும்பு, ஜூலை 11

பொலிஸ் நிலைய மோப்ப நாய் பிரிவின் கடமைகளுக்காக 58 மில்லியன் ரூபா செலவில் நெதர்லாந்தில் இருந்து கொண்டுவரப்பட்ட பொலிஸ் மோப்ப நாய்களில் "இங்கிலீஸ் ஸ்பானியல்" ரக பெண் நாய் கண்டியில் உள்ள பொலிஸ் தலைமையகத்தில் 07 நாய் குட்டிகளை ஈன்றுள்ளது.

இந்த ஏழு நாய்க்குட்டிகளின் பெறுமதி ஒரு கோடி ரூபாவை அண்மித்துள்ளதாக பொலிஸ் மோப்ப நாய் பிரிவு தெரிவித்துள்ளது. இந்த நாய்க்குட்டிகள் அனைத்தும் ஒரு மாத காலத்துக்கு தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

ஏழு குட்டிகளும் தாயும் கால்நடை மருத்துவரின் மேற்பார்வையில் உள்ளன எனவும், தனிமைப்படுத்தப்பட்ட காலம் முடியும் வரை வேறு விலங்குகள் அணுக அனுமதிக்கப்படாது எனவும் குறித்த பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி காஞ்சன கொடகும்புர தெரிவித்தார். (அ)

# சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு தற்காலிக மின்பிறப்பாக்கி வழங்கிவைப்பு

அங்கஜன் இராமநாதன் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 11

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்குத் தற்காலிக மின்பிறப்பாக்கி வழங்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் விபத்து மற்றும் சத்திர சிகிச்சைகள் பிரிவு உள்ளிட்ட பிரிவுகளுக்கான மின்சார மாற்றீடுகள் இல்லாத நிலை தொடர்பில் கடந்த சில நாட்களாக பேசப்பட்டுவந்தது.

குறிப்பாக, வைத்தியசாலையில் கடமையாற்றி, தற்போது விடுமுறையில் உள்ள பதில் வைத்திய அத்தியட்சகர் இராமநாதன் அர்ச்சுனா இது தொடர்பில் கருத்துக்களை வெளியிட்டிருந்தார்.

அதனடிப்படையில், மேலதிக மின்பிறப்பாக்கியின் அவசியத்தை கருத்தில்கொண்டு வைத்தியசாலைக்கு தற்காலிக அடிப்படையில் அதனை பெற்றுக் கொடுப்பதாக கடந்த 07 ஆம் திகதி உறுதியளித்திருந்தேன். அவ்வாக்குறுதிக்கமைய, 150 கே.வி. வலுவுடைய மின்பிறப்பாக்கியொன்று தற்காலிக




அடிப்படையில் நேற்று வைத்தியசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டது.

இந்த மின்பிறப்பாக்கியை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் தற்போதைய பதில் வைத்திய அத்தியட்சகர் கோபாலமூர்த்தி ரஜீவ் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இதன்போது, நிரந்தர மின்பிறப்பாக்கியை பெற்று வைத்தியசாலையில் பொருத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகவும், அதற்கான அறையொன்றை அமைக்கும் பணிகள் தற்போது முன்னெடுக்கப்படுவதாகவும் மருத்துவர் கோபாலமூர்த்தி ரஜீவ் தெரியப்படுத்தியுள்ளார்.

மின்பிறப்பாக்கி கையளிப்பு நிகழ்வில், சாவகச்சேரி பிரதேச இணைப்பாளர் டுபாகரன், சாவகச்சேரி நகர சபை எல்லைக் குட்பட்ட எனது வட்டாரப் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (அ)




# துருக்கி கடற்படையின் கப்பல் கொழும்பு வந்தது

கொழும்பு, ஜூலை 11

துருக்கி குடியரசின் கடற்படைக்கு செந்தமான கப்பல், கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

152 கடற்படையினருடன் இந்த கப்பல் வருகை தந்துள்ளதாக கடற்படைப் பேச்சாளர், கப்டன் கயான் விக்ரமசூரிய தெரிவித்துள்ளார்.

குறித்த கப்பல் இலங்கையில் நங்கூரமிடப்பட்டிருக்கும் காலப்பகுதியில் கடற்படையினர் நாட்டின் முக்கிய சில இடங்களை பார்வையிடவுள்ளனர்.

அதன் பின்னர் மேற்கு கடற்படை கட்டளை பிரிவிற்கு சொந்தமான கடற்பரப்பில் இலங்கை கடற்படை கப்பலுடன் அவர்கள் பயிற்சியிலும் ஈடுபடவுள்ளனர்.

இந்த கப்பல் இன்று நாட்டிலிருந்து புறப்பட்டுச் செல்லவுள்ளது. (அ)

# ஜூலை மாத ஓய்வூதிய கொடுப்பனவு விடுவிப்பு

கொழும்பு, ஜூலை 11

அரச துறையைச் சேர்ந்த சிலர் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ள போதிலும், 7 இலட்சத்து 8,231 ஓய்வூதியம் பெறுநர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஓய்வூதியக் கொடுப்பனவு விடுவிக்கப்பட்டுள்ளதாக ஓய்வூதியத் திணைக்களத் தலைவர் [illegible] தெரிவித்துள்ளார்.

இதன்படி, 24 அரச மற்றும் தனியார் வங்கிகளுக்கும், அஞ்சல் திணைக்களத்துக்கும் 28.5 பில்லியன் ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதன் மூலம் 99.5 சதவீத மானோர் ஓய்வூதியக் கொடுப்பனவைத் தாமத மின்றிப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த இரு தினங்களில் பிரதேச செயலகங்கள் இயங்காமையினால், சுமார் 13 ஆயிரம் பேர் மாத்திரம் தாமதமாக இன்று தங்களது ஓய்வூதியக் கொடுப்பனவைப் பெற்றுக் கொள்வார்கள் என ஓய்வூதியத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஜகத் டி. டயஸ் குறிப்பிட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணிலுக்கே எனது ஆதரவு!

## அறிவித்தார் லொஹான் ரத்வத்தை



கொழும்பு, ஜூலை 11

**கட்சி குறித்து சிந்திக்கும் நேரம் இதுவல்ல. எனவே, ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கே ஆதரவு வழங்குவேன் என்று பொதுஜன பெரமுன கட்சியின் உறுப்பினரான இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தை தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

நாட்டை மீட்டெடுத்த, சிறந்த வேலைத்திட்டம் உடைய, வாய்ச்சொல் வீரர் அல்லாத சிறந்த தலைவருக்கே ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவு வழங்குவேன். எனவே, நாட்டு மக்களும் ஜனாதிபதி ரணிலை ஆதரிக்கும் முடிவையே எடுப்பார்கள் என நம்புகின்றேன்.

கட்சி பேதமின்றி இலங்கை பற்றி சிந்தித்து மக்கள் வாக்களித்தால் ரணில் விக்கிரமசிங்க நிச்சயம் வெற்றிபெறுவார். இது கட்சி குறித்து சிந்திக்க வேண்டிய நேரம் அல்ல. தற்போது நாடு பற்றியே சிந்திக்க வேண்டும். தனிப்பட்டவர்களின் நலன் பற்றி சிந்திக்ககூடாது.

பொதுஜன பெரமுன என்பது நாமல், சாகர காரியவசம் போன்றோருக்கு உரித்தானது அல்ல. அது பலமான அமைப்பு. கூட்டு முடிவுகளே எடுக்கப்பட வேண்டும்-என்றார். (அ)

# அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரித்தால் தனியார்துறையின் போராட்டம் வெடிக்கும்!

## ஜனாதிபதிக்கு கடும் எச்சரிக்கை




கொழும்பு, ஜூலை 11

அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பை வழங்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுத்தால் தனியார் துறையினர் பாரிய போராட்டத்தில் ஈடுபடுவார்கள் என தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன எச்சரிக்கை விடுத்துள்ளார்.

வற் வரியை உயர்த்தி பொது மக்களுக்கும் தனியார் துறைக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பை வழங்கினால் தனியார் துறையினர் பாரிய போராட்டத்தில் குதிக்க நேரிடும் எனவும் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

சம்பள அதிகரிப்பு கோரிக்கைகளை நிறைவேற்ற வற் வரியை அதிகரிக்க அனுமதிக்கமாட்டோம். பாடசாலை மாணவர்களின் கல்வியைப் பாதுகாக்க நேர்மையுடனும் நியாயத்துடனும் செயற்படுமாறு ஜனாதிபதியிடம் கோருகிறோம் என்றும் அவர் கூறினார். (அ)

# துப்பாக்கிச் சூட்டில் முதியவர் மரணம்!

கொழும்பு, ஜூலை 11

எம்பிலிப்பிட்டிய- கொலன்ன பகுதியில் நேற்று முன் தினம் இரவு மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர் தேயிலை தோட்ட உரிமையாளர் ஒருவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இந்நிலையில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான 63 வயதான நபர் உயிரிழந்துள்ளார் எனவும், இத்துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டமைக்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் சம்பவ தினத்தன்று உயிரிழந்தவரின் வீட்டுக்கு சென்றிருந்த சந்தேக நபர்கள், அவரது மனைவியிடம் உரையாடிக் கொண்டிருந்ததாகவும், இதனைத் தொடர்ந்து தோட்ட உரிமையாளர் வீட்டில் இருந்து வெளியே வந்தபோது அவர் சுட்டுக்கொல்லப்பட்டதாகவும் பொலிஸார் கூறினர்.

இது குறித்த மேலதிக விசாரணைகளைக் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# கட்டுநாயக்க விமான நிலைய அபிவிருத்தி; பணிகளை ஆரம்பிக்க ஜெய்க்கா இணக்கம்

கொழும்பு, ஜூலை 11

கட்டுநாயக்க பண்டாரநாயக்க விமான நிலையத்தின் இரண்டாவது முனையத்தின் அபிவிருத்தியை மீண்டும் ஆரம்பிக்க ஜப்பானின் ஜெய்க்கா இணங்கியுள்ளது.

சலுகைக் கடனுதவியின் கீழ் இந்த திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்கள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

தனது அமைச்சு வளாகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் இந்த உடன்படிக்கை தொடர்பில் அமைச்சர் கருத்து வெளியிட்டார்.


இது தொடர்பான விசேட கலந்துரையாடல் நேற்று காலை அமைச்சில் இடம்பெற்றதுடன், இந்த நிர்மாணப் பணிகளுக்காக 170 பில்லியன் ரூபா கடனுதவி வழங்கப்பட உள்ளது.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் இரண்டாவது முனையத்தின் நிர்மாணப்பணி கடந்த 2020ஆம் ஆண்டு ஜெய்க்கா நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்பட்டது.

எனினும், அப்போது ஏற்பட்டிருந்த பொருளாதார நெருக்கடி காரணமாக 2022ஆம் ஆண்டு குறித்த திட்டம் நிறுத்தப்பட்டது.

ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகமையால் (ஜெய்க்கா) நிதியளிக்கப்பட்ட இந்த திட்டம் 2022 இல் இலங்கையின் கடன் மறுசீரமைப்பு இறுதி செய்யப்படும் வரை இடைநிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நகர மத்தியில் கவனிப்பாரற்று கிடக்கும் வவுனியா பண்டாரவன்னியன் சதுக்கம்!



வவுனியா, ஜூலை 11

வவுனியா நகரத்தின் மத்தியில் மாவட்ட செயலகத்தின் முற்பகுதியில் அமைந்துள்ள மாவீரன் பண்டாரவன்னியனின் சிலை அமைந்துள்ள பண்டாரவன்னியன் சதுக்கத்தின் தற்போதைய நிலை மிகவும் மோசமாக உள்ளது.

அப்பகுதி சரியான பராமரிப்பின்றி குப்பைகள் நிறைந்து காணப்படுகிறது.

கடந்த காலங்களில் பண்டாரவன்னியனின் பெயரில் சில அமைப்புகள் காணப்பட்டன. ஆனால், அந்த அமைப்புக்களும் தற்போது பண்டாரவன்னியனின் சிலையைப் போலவே கேள்விக்குறியாக உள்ளன.

வன்னியின் அடையாளமாக காணப்படும் பண்டாரவன்னியின் சிலைக்கு இப்படியொரு நிலையா? எனவும் மாவட்ட செயலகத்தினராவது இதனை கருத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.

ஞாபகார்த்த நாட்களில் மாத்திரம் இதனை சுத்தம் செய்வதை விடுத்து, தொடர்ந்தும் இந்தப் பகுதியை பராமரிப்பதற்கு உரிய அதிகாரிகள், சமூக ஆர்வலர்கள், சிவில் அமைப்புகள் முன்வரவேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ)


# சென்.பீற்றர்ஸ் படுகொலையின் 29ஆவது ஆண்டு நினைவு தினம்

யாழ்ப்பாணம், ஜூலை 11

நவாலி சென்பீற்றர்ஸ் தேவாலயத்தின் மீதான விமான தாக்குதலின் 29வது ஆண்டு நினைவு தினம் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை சென் பீற்றர்ஸ் தேவாலயத்தில் நினைவு கூரப்பட்டது.

அதனை தொடர்ந்து தேவாலயத்தின் அருகில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபியில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்களான பகீரதன், ஜெயந்தன், றமணன், அனுசன் மலரஞ்சலி செலுத்தி ஈகச்சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர். (அ)





# உயிரை பறித்த ரைஸ் குக்கர்!

கொழும்பு, ஜூலை 11

புத்தளம்-மன்னார் வீதி, வேப்பமடு, விழுக்கை எனும் பகுதியில் வசித்து வந்த இரு பிள்ளைகளின் இளம் தாய் ஒருவர் மின்சார தாக்குதலுக்குள்ளாகி பலியானார்.

பாபு துஷ்யந்தி (வயது-28) என்பவரே மின்சார தாக்குதலுக்குள்ளாகி நேற்று புதன்கிழமை அதிகாலை பலியாகியுள்ளார்.

இப்பெண்மணி புதிதாக வாங்கிய ரைஸ் குக்கரில் சோறு சமைக்க முயற்சித்தபோது மின்சாரம் தாக்குள்ளாகி உயிரிழந்துள்ளார்.


புத்தளம் தள வைத்தியசாலையில் புதன்கிழமை காலை புத்தளம் மற்றும் கற்பிட்டி பிரதேசத்துக்கான திடீர் மரண விசாரணை அதிகாரி பீ.எம். ஹிசாம் முன்னிலையில் பிரேத பரிசோதனை மற்றும் விசாரணைகள் இடம்பெற்றதன் பின்னர் மரண விசாரணை அதிகாரி பீ.எம். ஹிசாம் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்லாயிரக்கணக்கான அடியார்கள் கூடும் உகந்தை ஆலய கிணறுகளில் வாளி இல்லை!

## ஆலய வளாகத்தில் குப்பைகள் குவிப்பு





அம்பாறை, ஜூலை 11

**வரலாற்றுப் பிரசித்தி பெற்ற உகந்தைமலை ஸ்ரீ முருகன் ஆலய ஆடிவேல் விழா உற்சவம் ஆரம்பமாக இருக்கின்றது. இந்நிலையில் அங்குள்ள ஏழு கிணறுகள் வாளிகள் இன்றிக் காணப்படுகின்றன.**

தினமும் கதிர்காமம் பாதயாத்திரைக்கும் திருவிழாவுக்குமாக ஆயிரக்கணக் கான பக்தர்கள் உகந்தைமலை சென்று வருகின்றனர்.

இந்நிலையில், அங்குள்ள ஏழு கிணறுகள் வாளிகள் இன்றிக் காணப்படுகின்றன. இதனால் அங்கு செல்கின்ற ஆயிரக்கணக்கான பக்தர்கள் குடிநீரைப் பெறுவதற்கும் நீராடுவதற்கும் பலத்த சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

அதைவிட அங்கு தினமும் பெறப்படும் குப்பை கூழங்கள் ஆலய வளாகத்தின் தென் புறத்திலே கொட்டப்பட்டு வருகின்றன.

அதனால் அங்கு சூழல் மாசடைந்து பாதிப்படையவும் தொற்றுநோய்க்கான காரணிகள் தோன்றவும் வாய்ப்பு ஏற்படுகிறது.

இதனை நிவர்த்தி செய்ய ஆலய நிர்வாகம் மற்றும் சுகாதார துறையினர் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அங்கு செல்கின்ற அடி யார்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

திருவிழாக்கள் நிறைவடைய இன்னும் 12 நாட்கள் உள்ளன. அதாவது எதிர்வரும் 22 ஆம் திகதி தீர்த்த உற்சவம் இடம் பெற இருக்கின்றது.

எனவே இந்த ஆலயங்களிலுள்ள கிணறுகளுக்கு வாளிகளைப் பொருத்தி அடியார்களுக்கு போதுமான வசதியை ஏற்படுத்த வேண்டும். அதே போன்று இந்த குப்பை கூழங்கள் பக்தர்கள் கூடுகின்ற ஆலய வளாகத்தில் இருந்து அகற்றப்பட வேண்டும் என்றும் பக்தர்கள் கோரிக்கை விடுத்துவருகின்றார்கள்.

தேசத்து ஆலயமாக விளங்கும் இவ் ஆலய உற்சவத்திற்கான முன்னோடிக் கூட்டம் அம்பாறை அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரம முன்னிலையில் நடைபெற்று பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டபோதிலும் இவ்வாறான குறைபாடுகள் நிலவுவது அடியார்களின் நலன் புரிச் செயற்பாடுகளை வழங்குவதை கேள்விக் குறியாக்கியுள்ளது.

எனவே இந்த சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா? என்று பக்தர்கள் எதிர்பார்க்கின்றனர். (அ)



# சம்மாந்துறை குவாசி நீதிமன்றத்தின் செயல்பாடு மீண்டும் முன்னெடுப்பு

அம்பாறை, ஜூலை 11

அண்மைக்காலமாக இடைநிறுத்தப்பட்ட சம்மாந்துறை குவாசி நீதிமன்ற செயற்பாடு மீண்டும் நேற்று உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.

சம்மாந்துறை குவாசி நீதிமன்ற செயற்பாடு நீதிச்சேவை ஆணைக்குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் சம்மாந்துறை குவாஷி நீதிமன்றத்தின் பதில் குவாஷி நீதிபதியாக கடமையாற்ற நியமிக்கப்பட்ட அஹமட் லெவ்வை ஆதம்பாவா தலைமையில் உத்தியோகபூர்வ நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வின் சம்மாந்துறை பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் யு.எம் அஸ்லம், சம்மாந்துறை பிரதேச செயலக மேலதிக மாவட்ட பதிவாளர் றினோசா, மனித எழுச்சி நிறுவன பணிப்பாளர் கே. நிஹால் அகமட், சாய்ந்தமருது பிரதேச செயலக பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எல். முஸ்பிறா, மனித எழுச்சி நிறுவனத்தின் உத்தியோகத்தர் ஜெனிற்றா, சம்மாந்துறை உலமா சபை செயலாளர், சம்மாந்துறை முன்னாள் குவாசி நீதிபதி எஸ்.எல். அப்துல் சலாம் , சம்மாந்துறை குவாசி நீதிமன்ற செயலாளர் வஹாப், மற்றும் மனித எழுச்சி நிறுவன தொண்டர்களான பாத்திமா முர்ஷிதா மற்றும் மிஸ்ரியா, மற்றும் சாய்ந்தமருது குவாசி நீதிமன்ற உத்தியோகத்தர்கள் சாய்ந்தமருது பிரதேச செயலக பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எல். முஸ்பிறா, உளவளத் துணை உத்தியோகத்தர் எம்.சி. பௌமிலாவும் கலந்து கொண்டனர்.



# சேவை நலன் பாராட்டு விழா

மட்டக்களப்பு, ஜூலை 11

கடந்த 34 வருட காலமாக கல்விச் சேவையாற்றி ஓய்வு பெற்றுச் செல்லும் அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) உதவி அதிபர் ஏ.எம்.நபீலின் சேவையினைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு நேற்றுக் காலை கல்லூரி கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

அதிபர் ஏ.எச்.பௌஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது ஓய்வு பெற்றுச் செல்லும் உதவி அதிபர் ஏ.எம். நபீல் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் பிரதி அதிபர்களான என்.எம்.எம்.சாலிஹ், ஏ.எல்.நசீபா, உதவி அதிபர்களான எம்.ஐ.எல்.ஜாபீர், எம்.சம்ஸ்றபா உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

இதன்போது கடந்த 34 வருட காலமாக ஆசிரியர் சேவையில் தன்னை அர்ப்பணித்து கல்விச் சேவை புரிந்து வந்த ஏ.எம்.நபீலின் சேவையினைப் பாராட்டி பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டதுடன், பொற்கிளியும் வழங்கி வைக்கப்பட்டதுடன், நினைவுப் பரிசில்கள் மற்றும் வாழ்த்துப் பத்திரங்களும் அவருக்கு கையளிக்கப்பட்டன. (அ)

# ஒலுவில் அல்-ஹம்றா வித்தியாலய மாணவர் 30 போட்டிகளில் மாகாண மட்டத்திற்கு தெரிவு

மட்டக்களப்பு, ஜூலை 11

அட்டாளைச்சேனை பொது விளையாட்டு மைதானத்தில் மூன்று நாட்களாக நடைபெற்ற அக்கரைப்பற்று வலய பாடசாலைகளுக்கு இடையிலான 2024 ஆம் ஆண்டுக்கான மெய்வன்மைப் போட்டிகளில், ஒலுவில் அல் - ஹம்றா மகா வித்தியாலயம் மொத்தமாக 31 இடங்களை பெற்றுக் கொண்டது.



இங்கு ஆண்கள் பிரிவில் 21 போட்டிகளும் பெண்கள் பிரிவில் 09 போட்டிகளும் இடம் பெற்றது.இதில் 18-முதலாம் இடங்களையும், 12- இரண்டாம் இடங்களையும் 01-மூன்றாம் இடத்தையும் இம்மாணவர்கள் பெற்றுக் கொண்டனர்.

# கதிர்காம காட்டுப்பாதை இன்றுடன் மூடப்படும்!

அம்பாறை, ஜூலை 11

வரலாற்றுப்பிரசித்திபெற்ற கதிர்காம ஆடிவேல்விழாவிற்குச் செல்லும் பாதயாத்திரிகர்களுக்கான காட்டுப்பாதை இன்று வியாழக்கிழமை மூடப்படும் என்று அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவ.ஜெகராஜன் தெரிவித்தார்.

இன்று பிற்பகல் 2.30 மணியளவில் இவ் வருட பாதயாத்திரைக்கான காட்டுப் பாதை மூடப்படவுள்ளது.

அதேவேளை களுதாவளையிலிருந்து ஒருநாள் பாதை திறப்பை நீடிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

உகந்தமலை முருகனாலய வருடாந்த ஆடிவேல் விழா உற்சவம் கடந்த 6 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

வரலாற்று சிறப்புமிக்க கதிர்காம கந்தன் ஆலய ஆடிவேல் விழா உற்சவத்திற்காக வரலாற்றில் முதல் தடவையாக அதிகப்படியான யாத்திரீகர்கள் கானக பாதயாத்திரையை மேற்கொண்டு வந்தனர்.

வரலாற்றில் கானகப் பாதை திறந்த முதல் நாளில் சுமார் 7000 பாதயாத்திரிகர்கள் பயணித்தமை இதுவே முதல் முறையாகும்.

அதேபோல உகந்தை முருகனாலய கொடியேற்றம் இடம்பெற்ற கடந்த ஆறாம் திகதி கானகத்தில் பிரவேசித்த அடியார்களின் எண்ணிக்கை 10,000 ஆகும். இதுவும் ஒரு வரலாற்று பதிவாகும்.

கதிர்காமத்திற்கான கானகப் பாதை கடந்த 30 ஆம் திகதி திறக்கப்பட்டு கடந்த 12 தினங்கள் அடியார்கள் செல்ல அனுமதி வழங்கப்பட்டது.

கதிர்காமம் மற்றும் உகந்தமலை முருகனாலயங்களின் வருடாந்த ஆடிவேல் விழா உற்சவம் கடந்த 06ஆம் திகதி ஆரம்பமானது. எதிர்வரும் 22ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவிருப்பது தெரிந்ததே. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்தியா - ரஷ்யா நட்புறவு மூலம் உக்ரைன் போரை முடிவுறுத்தலாம்

வாஷிங்டன், ஜூலை 11

ரஷ்யாவுடனான இந்தியாவின் நீண்டகால உறவு, உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கும், அமைதிக்கான நடவடிக்கையை எடுக்கவும் அந்நாட்டு ஜனாதிபதி புடினை ஊக்குவிக்கும் என்று அமெரிக்கா நம்புகிறது - அமெரிக்க வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

இந்தியா - ரஷ்யா இடையிலான 22ஆவது வருடாந்திர உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக இந்திய பிரதமர் மோடி ரஷியா சென்றார். ரஷ்யா-உக்ரைன் இடையே போர் தொடங்கிய பிறகு மோடி ரஷ்யா சென்றிருப்பது இதுவே முதன்முறை.

இந்நிலையில், ரஷ்யாவுடனான இந்தியாவின் உறவு உக்ரைனில் உள்ள மோதலை முடிவுக்குக் கொண்டுவர, ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினை வலியுறுத்தும் திறனைத் தருகிறது என்று வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் கூறுகையில்,

"உக்ரைனில் அமைதியை நிலைநாட்டுவதற்கான முயற்சிகளுக்கு இந்தியா உள்பட அனைத்து நாடுகளும் ஆதரவளிப்பது முக்கியமானதாக நாங்கள் கருதுகிறோம். இதனை அனைத்து நாடுகளும் உணர வேண்டியது அவசியம். ரஷ்யாவுடனான ணஇந்தியாவின் நீண்டகால உறவு, உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கும், அமைதிக்கான நடவடிக்கையை எடுக்கவும் அந்நாட்டு ஜனாதிபதி புடினை ஊக்குவிக்கும் என்று அமெரிக்கா நம்புகிறது. போரை தொடங்கிய புடினால், அதனை முடிவுக்குக் கொண்டுவர முடியும்" என்று அவர் கூறினார். (ஐ)

# சிறார் பட்டினியால் பலி; பின்னணியில் இஸ்ரேல்!

## இதுவும் ஒருவகை இனவழிப்பே என்று ஐ. நா. வல்லுநர்கள் சாடல்

ஜெனிவா, ஜூலை 11

காசாவில் பட்டினியால் குழந்தைகள் மற்றும் சிறுவர்கள் உயிரிழந்து வருகின்றனர் என்று ஐ. நா. வல்லுநர்கள் தெரி வித்துள்ளனர். இதன் பின்னணியில் இஸ்ரேல் உள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தனர். இது ஒருவகையில் பலஸ்தீன மக்கள் மீது நடத்தப்படும் இனப்படுகொலை என்றும் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஆண்டு ஒக்ரோபர் இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையே மோதல் ஏற்பட்டது. இதில் காசா பகுதி மக்கள் தங்களின் வசிப்பிடங்களில் இருந்து கான் யூனிஸ் பகுதிக்கு புலம்பெயர்ந்துள்ளனர். இந்நிலையில், அங்கு நிலவும் பட்டினி சூழல் கவனம் பெற்றுள்ளது.

பலஸ்தீன மக்களுக்கு எதிராக இஸ்ரேல் உள்நோக்கத்துடன் பட்டினி சூழலை ஏற்படுத்தியுள்ளது. இது இனப்படுகொலையின் ஒரு வடிவம். இதனால் காசா முழுவதும் பஞ்சம் ஏற்பட்டுள்ளது என ஐ.நா வல்லுநர்கள் தங்களது அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து ஐ. நா. சபை இன்னும் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஐ. நாவின் உணவுக்கான உரிமை சார்ந்த சிறப்பு அறிக்கையாளர் மைக்கேல் ஃபக்ரி உட்பட ஐ.நா வல்லுநர்கள், காசாவில் பஞ்சம் ஏற்பட்டுள்ளதை மறுக்க முடியாது என தெரிவித்துள்ளனர்.



கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் முதல் இதுவரை சுமார் 34 பலஸ்தீனியர்கள் பட்டினியால் உயிரிழந்தனர். இதில் பெரும்பாலானவர்கள் குழந்தைகள் என ஐ. நா. வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

ஹமாஸை காக்கும் நோக்கில் இப்படி தன்னிச்சையாக மைக்கேல் ஃபக்ரி உள்ளிட்ட ஐ. நா. அதிகாரிகள் அறிக்கை வெளியிடுகின்றனர் என்று இஸ்ரேல் இதற்கு மறுப்பு தெரிவித்துள்ளது.

அண்மையில் ஊட்டச்சத்து குறைபாட்டால் மூன்று குழந்தைகள் உயிரிழந்ததாக ஐ. நா. வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர். ஆறு மாத குழந்தை, 9 மற்றும் 13 வயது சிறுவர்கள் என மூன்று பேர் உயிரிழந்துள்ளனர். மே 30, ஜூன் 1 மற்றும் ஜூன் 3 ஆகிய திகதிகளில் அவர்கள் உயிரிழந்தனர். இதில் இருவர் மருத்துவமனையிலும், ஒருவர் முகாமிலும் உயிரிழந்தனர். மேலும், காசா விவகாரத்தில் உலக நாடுகள் முன்பே தலையிட்டு இருக்க வேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். அப்படி நடந்திருந்தால் பேரழிவு தடுக்கப்பட்டு இருக்கும் என கூறியுள்ளனர். (ஐ)

# ஹிஜாப் அணியாத பெண் ஊழியர்கள் விமான நிறுவனத்தை மூடியது ஈரான்!

தெஹ்ரான், ஜூலை 11

துருக்கிக்கு சொந்தமான விமான நிறுவனத்தில் பணியாற்றும் பெண்கள் ஹிஜாப் அணியாததால் அதன் பணிமனையை ஈரான் மூடியுள்ளது.

இஸ்லாமிய மத சட்டங்களை கடுமையாக பின்பற்றி வரும் ஈரானில் பெண்கள் மற்றும் 9 வயதுக்கு மேற்பட்ட சிறுமிகள் இஸ்லாமிய மத உடையான ஹிஜாப் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, துருக்கி விமான நிறுவனத்தின் கிளை அலுவலகம் ஈரான் தலைநகர் தெஹ்ரானில் செயல்பட்டு வருகிறது.

இந்த விமான நிறுவனத்தில் பணியாற்றும் ஈரான் நாட்டை சேர்ந்த பெண்கள் ஹிஜாப் அணியாமல் பணி செய்கின்ற னர் என்று பொலிஸாருக்குத் தெரியவந்தது.



இதையடுத்து, பெண்கள் ஹிஜாப் அணிய மறுத்து பணி யாற்றிய துருக்கி விமான நிறுவன பணிமனையை ஈரான் அரசு மூடியுள்ளது. விமான நிறுவன பணியகத்துக்கு சென்ற ஈரான் பொலிஸார் அந்தப் பணிமனையை சீல் வைத்தனர். (ஐ)

# கீவ் நகரம்மீது தாக்குதல்; சிறார் உட்பட 31 பேர் பலி

கீவ், ஜூலை 11

உக்ரைனில் சிறுவர் மருத்துவமனை உள்ளிட்ட இடங்களில் ரஷ்யா நேற்று புதன்கிழமை நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் 31 பேர் உயிரிழந்தனர், 154 பேர் காயமடைந்தனர்.

நாடு முழுவதும் 5 முக்கிய நகரங்களை குறிவைத்து ரஷ்யா இந்தத் தாக்குதலை நடத்தியது. 40இற்கும் மேற்பட்ட ஏவுகணைகள் மூலம் ரஷ்யா சரமாரியாக நடத்திய தாக்குதலில் அடுக்குமாடி குடியிருப்புகள், பொதுக் கட்டமைப்புகள் சேதமடைந்தன என்று தனது சமூக ஊடகப் பதிவில் உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி குறிப்பிட்டுள்ளார்.

மருத்துவமனை வளாகத்தில் ரஷியாவின் கேஹெச்-101 ரக ஏவுகணையின் சிதறல்கள் கண்டெடுக்கப்பட்டதாகவும், அதன் அடிப்படையில் ரஷ்யாவுக்கு எதிராக போர்க் குற்ற விசாரணை நடத்தப்படவிருப்பதாகவும் உக்ரைன் அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ)

# இறந்து 22 வருடங்களின் பின்னர் பனிச்சறுக்கு வீரரின் உடல் மீட்பு

லிமா, ஜூலை 11

பனிச்சரிவில் சிக்கி காணாமல்போனவரின் உடல் 22 ஆண்டுகளின் பின்னர் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

தென்னமெரிக்காவின் பெருவில் சுமார் 22 ஆயிரம் அடி உயரம் கொண்ட "ஹஸ்கரான்" மலை உள்ளது. இந்த மலையில் கடந்த 2002ஆம் ஆண்டு ஜூன் மாதம் அமெரிக்காவை சேர்ந்த வில்லியம் ஸ்டாம்பிள் என்ற மலையேற்ற வீரர் பனிச்சரிவில் சிக்கி மாயமானார். நீண்ட நாட்களாக தேடியும் அவரை கண்டுபிடிக்க முடியாததால் தேடுதல் பணி கைவிடப்பட்டது.



இந்த நிலையில் 22 ஆண்டுகளுக்குப் பிறகு வில்லியம் ஸ்டாம்பிளின் உடல் ஹஸ்காரன் மலையில் உள்ள கார்டிலெரா பிளாங்கா மலைத் தொடரில் உறைந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

அவரின் உடல், உடைகள், மலையேற்றக் கருவிகள் மற்றும் காலணிகள் ஆகியவை பனியில் உறைந்து பதப்படுத்தப்பட்ட நிலையில் காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவரது உடைமையில் இருந்த கடவுச்சீட்டு மூலம் வில்லியம் ஸ்டாம்பிளினை பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# உக்ரைன், காசா போர்களை நிறுத்த புதிய முயற்சி தேவை

## போப் பிரான்சிஸ் கோரிக்கை



வத்திக்கான், ஜூலை 11

உக்ரைன் மற்றும் காசாவில் நடத்தப்பட்ட தாக்குதல்களுக்கு போப் பிரான்சிஸ் வேதனை தெரிவித்துள்ளார். உக்ரைன் மற்றும் காசாவில் சமீபத்தில் நடந்த கொடூர தாக்குதல்களை குறிப்பிட்டு, புதிய அமைதி முயற்சிகளை ஏற்படுத்த வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

படுகொலை செய்யப்பட்ட ஒன்றுமறியாத மக்கள் மற்றும் காயமடைந்த நபர்களுக்கு எனது இரங்கல்களை தெரிவித்து கொள்கிறேன். நடந்து வரும் மோதல்களுக்கு முடிவு ஏற்படுத்துவதற்கான வலுவான பாதைகள் அடையாளம் காணப்பட வேண்டும் என பிரார்த்தனை செய்கிறேன் - என்று கூறியுள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரயில் நிலைய அதிபர்களின் புறக்கணிப்பு தொடர்கிறது!

## கட்டுப்பாட்டாளர்களும் போராட்டம்

கொழும்பு, ஜூலை 11

**பதவி உயர்வு உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து ரயில் நிலைய அதிபர்கள் மற்றும் ரயில்வே கட்டுப்பாட்டாளர்கள் ஆரம்பித்துள்ள பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுக்க தீர்மானித்ததாக ரயில் நிலைய அதிபர்கள் சங்கத்தின் தலைவர் சுமேத சோமரத்ன தெரிவித்தார்.**

பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்த நிலைய அதிபர்கள் மற்றும் கட்டுப்பாட்டாளர்கள் தமது பணியை கைவிட்டதாக ரயில்வேயின் பதில் பொது முகாமையாளர் எஸ்.எஸ். முதலிகே தெரிவித்த கருத்துக்கு எதிராக தொழிற்சங்கத்தின் நிறைவேற்றுச் சபை பணிப்புறக்கணிப்பை தொடர தீர்மானித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, ரயில் நிலைய அதிபர்கள் மற்றும் ரயில் கட்டுப்பாட்டாளர்கள் நேற்று நண்பகல் 12 மணிக்கு முன்னதாக அந்தந்த ரயில் நிலையத்திலோ அல்லது அருகில் உள்ள ரயில் நிலையத்திலோ கடமைக்கு சமூகமளிக்கவேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வாறு செய்யாத அனைத்து நிலைய பொறுப்பதிகாரிகள் மற்றும் கட்டுப்பாட்டாளர்கள் சேவையை விட்டு விலகியவர்களாக கருதப்படுவார்கள் எனவும் அந்த அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# வாகனம் இறக்குமதி செய்வது குறித்து ஒகஸ்ட் இரண்டாவது வாரத்தில் முடிவு

கொழும்பு, ஜூலை 11

வாகன இறக்குமதிக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குவது தொடர்பான இறுதித் தீர்மானம் ஒகஸ்ட் இரண்டாம் வாரத்தில் எடுக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழு கடந்த 4ஆம் திகதி கூடி இறுதி அறிக்கையை ஆகஸ்ட் மாதம் இரண்டாவது வாரத்திற்குள் அமைச்சரவையில் சமர்ப்பிப்பதற்கு இணக்கம் தெரிவித்ததாக அமைச்சர் சுட்டிக்காட்டினார். நாட்டின் பரிவர்த்தனை நிலை மற்றும் மக்களின் தேவைகளின் முன்னுரிமைக்கு ஏற்ப, வாகனங்களை இறக்குமதி செய்ய முடியும் என நம்புவதாக அமைச்சர் தெரிவித்தார். பொது போக்குவரத்து வாகனங்கள், சரக்கு போக்குவரத்து வாகனங்கள், மாற்று வாகனங்கள், பொது வாகனங்கள் மற்றும் தனியார் வாகனங்கள் ஆகிய ஒழுங்குமுறைகளின் கீழ் இறக்குமதி செய்யப்படும் என அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை, சுற்றுலாத்துறைக்காக 1000 வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும், அந்த வாகனங்கள் எதுவும் இதுவரை இறக்குமதி செய்யப்படவில்லை எனவும் அமைச்சர் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இதன் கீழ் சுற்றுலா அமைச்சின் அனுமதிக்கு உட்பட்டு 250 பேருந்துகள் மற்றும் 750 வேன்கள் இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பாராளுமன்றத்துக்கு அருகே அதிபர்கள் நேற்று போராட்டம்

## சபையில் தெரியப்படுத்தினார் சஜித்




கொழும்பு, ஜூலை 11

பாராளுமன்றத்திற்கு அருகாமையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள அதிபர்களின் பிரச்னைகளை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தில் முன்வைத்தார்.

நேற்று பாராளுமன்றத்திற்கு அருகில் உள்ள பொல்துவ சந்தியில் அமைதியான முறையில் அதிபர்கள் இணைந்து முன்னெடுத்த ஆர்ப்பாட்டத்தின் போது, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குறித்த இடத்திற்கு விஜயம் செய்து அவர்கள் எதிர்நோக்கி வரும் பிரச்னைகள் குறித்து கேட்டறிந்தார். இந்த பிரச்னைகள் குறித்து பாராளுமன்றத்தில் பிரஸ்தாபிப்பேன் என்று இங்கு எதிர்க்கட்சித் தலைவர் வாக்குறுதியளித்தார். இதன் பிரகாரம், நேற்று பாராளுமன்றம் கூடிய போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குறித்த பிரச்னைகளை சபையில் முன்வைத்தார்.

இங்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச-

தற்போது, பொல்துவ சந்தியில் அதிபர்களால் போராட்டம் நடத்தப்பட்டு வருகிறது. எமது நாட்டில் 12000-13000 அதிபர்கள் உள்ளனர். இவர்களது சம்பள முரண்பாடுகள், பிரதான கொடுப்பனவுகள், தொடர்பாடல் கொடுப்பனவுகள் மற்றும் பயண கொடுப்பனவுகள் தொடர்பான பிரச்சினைகளை முன்வைத்தே இந்த போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். இலங்கை அதிபர் சேவையின் தரம் II இலிருந்து தரம் I இற்கு பதவி உயர்வு பெறும் போது அவர்களின் சம்பளம் ரூ.3000 முதல் 6000 வரை வெட்டப்படுகிறது.

அதிபர் சேவையை நிறைவேற்றுத் தர சேவையாக கருதப்பட்டாலும், அவர்களுக்கு எந்த சேவை வசதிகளும் கிடைப்பதில்லை. எந்த கொடுப்பனவுகளையும் அவர்கள் பெறுவதுமில்லை. தற்போது இந்தப் பிரச்னைகளுக்கு தீர்வு காணும் வகையில் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள போதிலும் அது உபகுழுவில் முடங்கிப்போயுள்ளது. எனவே குறித்த அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்து அரசாங்கம் கூடிய விரைவில் தீர்வைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றார். (அ)

# சபைக்குள் வெடித்தது சு.கவின் கட்சி சண்டை!

கொழும்பு, ஜூலை 11

சுதந்திரக் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிகள் நாளுக்கு நாள் பூதாகரமாகிவரும் பின்புலத்தில் நேற்று முன்தினம் அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சபையில் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இலங்கைத் தொலைத்தொடர்பு (திருத்தச்) சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீடு மற்றும் சில சட்டங்கள் தொடர்பில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தில் உரையாற்றி முன்னாள் ஜனாதிபதியும் சு.கவின் முன்னாள் தலைவருமான மைத்திரிபால சிறிசேன,

நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பை நடைமுறைப்படுத்த விடாது பொலிஸ் அதிகாரத்தை பயன்படுத்தி சுதந்திரக் கட்சியை அழிக்கும் முயற்சிகளில் சிலர் ஈடுபட்டு வருகின்றனர்.

எத்தகைய சவால்கள் வந்தாலும் அவற்றை முறியடித்து எமது உயிர்களை தியாகம் செய்தாவது சுதந்திரக் கட்சியை பாதுகாப்போம் என தெரிவித்தார்.

இதன்போது குறுக்கிட்ட அமைச்சர் மகிந்த அமரவீர,

"சு.கவின் உறுப்பினர்கூட இல்லாத ஒருவருக்கு சு.கவின் தலைமை பதவியை வழங்கியிருந்தனர். இவர்கள்தான் சு.கவை பாதுகாப்பு பற்றி பேசுகின்றனர்.

தயாசிறி ஜயசேகரவின் வழக்கு பற்றி பேசுகின்றனர். அவரை கட்சியில் இருந்து நீக்கியது யார்? அவர் யாருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்திருந்தார்?

வழக்கு தாக்கல் செய்தவருக்கும் பிரதிவாதிகளுக்கும் இடையில் ஏற்பட்ட உடன்பாடுகளின் பிரகாரம் இந்த வழக்கின் தீர்ப்பு வெளியாகியிருக்கலாம். ஆனால், தயாசிறி ஜயசேகரவுக்கு தன்னிச்சயமாக கட்சியின் அலுவலகத்துக்குள் நுழைய முடியாது.

சட்டப்பூர்வமாக கட்சியின் தலைவர் மற்றும் பொதுச் செயலாளர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அதற்கு எதிர்ப்பு என்றால் நீதிமன்றம் செல்ல முடியும். அவ்வாறு செய்யவில்லை.

140 இற்கும் அதிகமான பாராளுமன்ற உறுப்பினர்கள் எமது கட்சிக்கு இருந்தனர். இன்று கட்சிக்கு என்ன நடந்துள்ளதென அனைவருக்கும் தெரியும்."-என்றார்.

இதன்போது மீண்டும் குறுக்கிட்ட மைத்திரிபால சிறிசேன,"

இந்த குழு அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கியமையே கட்சி பிளவுபட பிரதான காரணம். அங்கிருந்தான் அனைத்து பிளவுகளும் ஏற்பட்டன.

ஜனாதிபதித் தேர்தல் நெருங்கிவரும் சூழலில் சு.கவை அரசாங்கத்துடன் முடிச்சிப்போடும் சதித்திட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அரச அதிகாரத்தை பயன்படுத்தி கட்சியின் அமைப்பாளர்களை சிஐடிக்கும், பொலிஸூக்கும் அழைத்துச் செயல்கின்றனர்."-என்றார்.

மைத்திரிபால சிறிசேனவுக்கு பதிலளிக்க எழுந்த லசந்த அழகியவண்ண, "கட்சியை காட்டிக் கொடுத்தது நாங்கள் அல்லர். நாம் சென்றதால் கட்சி பிளவுபடவும் இல்லை. 2014ஆம் ஆண்டு அப்பத்தை சாப்பிட்டுவிட்டு கட்சியை முதலில் காட்டிக்கொடுத்தது மைத்திரிபால சிறிசேன தான்.

கட்சியின் தலைவராக இருந்து செய்ய முடியாததை வீட்டுக்குச் சென்று புலம்புவதால் செய்ய முடியாது. இது பாராளுமன்றம் கட்சியின் விவகாரங்களை பேசும் இடம் இல்லை." என காரசாரமாக மைத்திரியை பார்த்துக் கூறினார்.

கோபத்துடன் மீண்டும் குறுக்கிட்ட மஹிந்த அமரவீர, தாம் சுத்தமானவர்கள் போன்று இங்கு பேசுகின்றனர். அவர்கள் செய்த ஊழல்கள் மற்றும் அவற்றுக்கான ஆதாரணங்கள் உள்ளன. அவற்றை விரைவில் வெளியிடுவோம்."-என்றார்.

இவர்களை கட்டுப்படுத்த சபா பீடத்தில் இருந்த இம்ரான் மஹ்ரூப் முயற்சித்த போதும் வாக்குவாதம் உச்சம் தொட்டது. சபையின் இருதரப்பில் இருந்து கனத்த குரல்கள் ஒலித்தன.

மீண்டும் கருத்து வெளியிட்ட லசந்த அழகியவண்ண, "நாங்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நீதிமன்றத் தீர்ப்பை மீறி செயல்படவில்லை. மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராகவே தயாசிறி வழக்கு தாக்கல் செய்திருந்தார்.தற்போது அவர் தலைவர் இல்லை. ஆட்சேபனைகள் இருந்தால் எவரும் நீதிமன்றம் சென்று பிரச்னையை தீர்த்துக்கொள்ள முடியும்." எனக் கூறினார்.

வாதத்தை முடிக்குமாறு இம்ரான் மஹ்ரூப் மைத்திரிபால சிறிசேனவுக்கு சந்தர்ப்பம் வழங்கிய போது, கடும் கோபத்துடன் எழுந்த அவர்,

கட்சியை காட்டிக்கொடுத்த இவர்கள்தான். இன்று தயாசிறியை பற்றி பேசுகின்றனர். கட்சியின் மத்திய குழு அரசாங்கத்தில் அமைச்சுப் பதவியை பெற்றுக்கொள்ள கூடாதென தீர்மானம் நிறைவேற்றிய போது கள்ளத்தனமாக அமைச்சுப் பதவியை பெற்ற இவர்கள்தான் கட்சியையும் பிளவுபடுத்தினர்." எனக் குற்றம் சாட்டினார்.

வாக்குவாதம் உக்கிரமடைந்ததால் அதனை முடிவுக்கு கொண்டுவரும் வகையில் உரை பட்டியலில் அடுத்து இருந்த சிவஞானம் சிறிதரன் எம்.பிக்கு உரையாற்றும் சந்தர்ப்பத்தை இம்ரான் மஹ்ரூப் வழங்கினார்.

# பாடசாலை, வைத்தியசாலைகளில் விரைவில் புதிய விதிகள் அறிமுகம்

## அமைச்சரவை ஒப்புதல்

கொழும்பு, ஜூலை 11

பாடசாலை கற்பித்தல் நடவடிக்கைகள் மற்றும் மருத்துவமனைகளில் நோயாளி பராமரிப்பு சேவைகள் சீராக நடைபெறுவதை உறுதி செய்வதற்காக புதிய விதிகளை அறிமுகப்படுத்த அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

பாடசாலைக் காலங்களில் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையிலும் வைத்தியசாலைகளில் நோயாளர் பராமரிப்பு சேவைகளை சீர்குலைக்கும் வகையிலும் சில குழுக்கள் மேற்கொள்ளும் முறையற்ற செயற்பாடுகள் தொடர்பில் அமைச்சரவை கவனத்தில் எடுத்துள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இவ்வாறான சட்டவிரோத செயல்கள் மூலம் பாடசாலை மாணவர்கள் மற்றும் நோயாளர்களுக்கு ஏற்படும் அநீதிகளை தடுப்பதற்கு சட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொடரும்...

உள்ளாக்குவதற்கான ஒரு பயிற்சியின் ஆரம்பமாக இது இருக்கலாம்.

பணிப் புறக்கணிப்பில் ஈடுபடுவோர் சம்பளத்தை உயர்த்துவதற்கான சாத்தியமற்ற கோரிக்கையை முன்வைக்கின்றனர். ரயில்வே ஊழியர்கள் மற்றும் பிறர் கோரும் சம்பள உயர்வுக்கான நிதியை ஒதுக்குவதற்கு, பெறுமதி சேர் வரி மற்றும் பிற வரிகளை அரசாங்கம் அதிகரிக்க வேண்டும்.

சம்பள உயர்வை வழங்க முடியாது என்பது எதிர்க்கட்சிகளுக்கு நன்றாகவே தெரியும். ஆனால், பொய்யான வாக்குறுதிகளை அளிக்கின்றனர். தயவு செய்து இதுபோன்ற செயல்களில் ஈடுபடாதீர்கள் - என்றும் அவர் கேட்டுக் கொண்டார். (ஐ)

## சஜித்துடன்...

முன்வைத்து வந்தார்.

என்றாலும், அதனை சஜித் பிரேதாச நிராகரித்து வந்தார் என தகவல்கள் வெளியாகியிருந்த நிலையிலேயே டலஸ் அழகப்பெரும ஐக்கிய மக்கள் சக்தியில் இணையும் தீர்மானத்தை எடுத்துள்ளதாக தெரியவருகிறது. (அ)

## சிறார்...

முறைப்பாடுகளின் அடிப்படை யிலும் பிரதேச செயலாளரின் விசாரணை குழுவால் மேற்கொள்ளப்பட்ட கள விசாரணை அறிக்கைக்கு அமைவாகவும் துறைசார் திணைக்கள ஆணையாளருக்கு ஆளுநரால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. இதன் தொடர்ச்சியாக ஆளுநரால் நியமிக்கப்பட்ட விசேட விசாரணைக் குழுவினர் மீண்டும் களஆய்வு மேற்கொண்டு ஆளுநருக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

இந்த அறிக்கையின் பிரகாரம் சம்பந்தப்பட்ட இல்லம் ஒன்றில் கண்டறியப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்ய எடுக்கப்பட வேண்டிய தொடர் நடவடிக்கைகள் பற்றிய அறிவுறுத்தல்கள் உரிய திணைக்களங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன - என்று ஆளுநர் செயலகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஆளுநரின் அறிவுறுத்தல்களில் இருந்து மாறுபட்ட வகையில் சில ஊடகங்களும் சமூகவலைத் தளங்களும் வெளியிடும் செய்திகளுக்கு நாம் பொறுப்புக்கூற முடியாது என்றும் ஆளுநர் செயலகம் குறிப்பிட்டுள்ளது. (ஐ)

## ஜனாதிபதி...

திஸநாயக்க, எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல ஆகியோர் கூட்டாக முன்வைத்த பிரேரணைக்கு அமைய இந்த ஒத்திவைப்பு விவாதம் நடத்தப்படவுள்ளதாக பாராளுமன்ற தொடர்பாடல் பிரிவு தெரிவித்துள்ளது.

இன்று வியாழக்கிழமை வாய்மூல விடைக்கான வினாக்களை தொடர்ந்து, காலை 10.30 முதல் மாலை 5.30 வரை விவாதத்தை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரசமைப்பு மற்றும் ஏனைய தொடர்புடைய சட்டங்களின் ஏற்பாடுகளுக்கமைய 2024 செப்ரெம்பர் 17 முதல் ஒக்ரோபர் 16 வரையான காலப் பகுதியினுள் ஜனாதிபதி தேர்தலை நடத்துவது தொடர்பிலேயே இந்த விவாதம் நடைபெறவுள்ளதாக பாராளுமன்ற தொடர்பாடல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதனிடையே, அரசாங்கம் பல்வேறு சூழ்ச்சிகளின் ஊடாக ஜனாதிபதியின் பதவிக்காலத்தை ஒருவருடத்தினால் நீடிப்பதற்கு முயற்சியை மேற்கொண்டுள்ளதாக எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 2 வாரங்களுக்குள் இந்த விடயம் தொடர்பில் பல்வேறு சட்ட மூலங்களை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் சாடியிருந்தார். (ஐ)

## புதிய...

அமரபுர மகா நிக்காய ஆரியவன்ச சத்தம்ம பீடத்தின் 44ஆவது உபசம்பதா நிகழ்வு நேற்று காலியில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு பேசுகையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் தெரிவித்தவை வருமாறு,

இரண்டு ஆண்டுகளுக்கு முன், இந்த நாட்டின் பொருளாதாரம் சரிந்தது. நாடு வங்குரோத்து நிலைக்குச் சென்றது. நீண்டகாலமாக பேணப்பட்ட இறக்குமதி பொருளாதார கொள்கையால் அந்த நிலைமையை நாம் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. ஆனால், மற்றைய அனைத்து தேரவாத பௌத்த நாடுகளும் ஏற்றுமதி பொருளாதாரத்தை நோக்கி நகர்ந்தன.

எனவே, நாட்டில் புதிய பொருளாதார, அரசியல் முறைமைகள் விரைவில் உருவாக்கப்பட வேண்டும். நாட்டை புதிய பாதைக்குக் கொண்டு செல்வதற்கு மகா சங்கத்தினரின் வழிகாட்டல்களும் ஆலோசனைகளும் மிகவும் முக்கியமானவை - என்றார். (ஐ)

## அரசமைப்பு...

எனினும் அரசியல மைப்பின் 83 (பி) சரத்தில் ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத்தின் பதவிக் காலம் 6 வருடங்களை விட அதிகமாக நீடிக்கப்படுமாயின், அதற்காக முன்வைக்கப்படும் சட்டமூலத்திற்காக சர்வஜன வாக்கெடுப்பு அவசியமென குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத்தின் பதவிக்காலத்தை 6 வருடங்களுக்கு மேல் நீடிப்பதற்காக முன்மொழியப்படும் பிரேரணைக்கு, சர்வஜன வாக்கெடுப்பு அவசியம் என அரசியலமைப்பின் 83 ஆ பிரிவு கூறுகின்றது.

இந்த 2 சரத்துகளிலும் குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்காலத்தை 5 வருடங்களாக மாற்றுவதற்கு, உரிய சட்ட மூலத்தை முன்வைப்பதற்கான அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது. (அ)

## கொக்குத்...

தொடரும் அகழ்வில் நேற்று 6ஆவது நாளாக அகழ்வாய்வு தொடர்ந்தது.

முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில், தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவ உள்ளிட்ட குழுவினர் தடயவியல் பொலிஸார் உள்ளிட்ட தரப்புகளின் பங்குபற்றுதலுடன் இந்தப் பணி முன்னெடுக்கப்பட்டது. இதன்போது, இரண்டாவது நாளாகவும் ஐ. நா. சபையின் இலங்கைக்கான பணிமனையின் மனித உரிமைகள் பணியாளர் செல்ரின் அகிலனும் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்தார்.

கொக்கிளாய் - முல்லைத்தீவு பிரதான வீதியின் கீழாக தோண்டப்பட்டிருந்த இந்தப் பகுதியில் 3 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டன. அத்துடன், துப்பாக்கி சன்னங்கள், இராணுவ முகாம்களில் பயன்படுத்தப்படும் வேலிக் கம்பிகளின் துண்டுகள் என்பனவும் கண்டுபிடிக்கப்பட்டன.

நேற்று அடையாளம் காணப்பட்ட 3 மனித எலும்புக்கூட்டு எச்சங்களுடன், இரண்டாம் கட்ட அகழ்வாய்வில் அடையாளம் காணப்பட்ட 4 மனித எலும்புக்கூட்டு எச்சங்களையும் சேர்த்து 7 எலும்புக்கூடுகளும் வரும் நாட்களில் முழுமையாக வெளியே எடுக்கப்படும் என்று தொல்லியல் திணைக்கள பேராசிரியர் ராஜ் சோமதேவ, மனித உரிமைகள் சட்டத்தரணி நிரஞ்சன் ஆகியோர் ஊடகங்களுக்குத் தெரிவித்தனர்.

முன்னதாக, இரு கட்டங்களாக நடத்தப்பட்ட அகழ்வு பணிகளில் 40 மனித எலும்புக்கூட்டு எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அரச ஊழியர்களின் சம்பளத்தை உயர்த்த ரூ. 30 ஆயிரம் கோடி மேலதிகமாக தேவை!

## நிதி இராஜாங்க அமைச்சர் செஹான்

கொழும்பு, ஜூலை 11

அரச சேவையாளர்களுக்கு மீண்டும் சம்பளத்தை அதிகரிக்க வேண்டுமாயின், வருடாந்தம் 30 ஆயிரம் கோடி ரூபாயை மேலதிகமாக ஒதுக்க வேண்டும். நாணயம் அச்சிடாமல் சம்பளத்தை அதிகரிப்பதாயின் வற் வரியை 22 சதவீதத்தாலும், நிறுவன வரியை 42 சதவீதத்தாலும் அதிகரிக்க வேண்டும். இதற்கு நாட்டு மக்கள் இணக்கம் தெரிவிப்பார்களா?

- இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற மது வரி கட்டளைச் சட்டம் மற்றும் ஏற்றுமதி, இறக்குமதி கட்டுப்பாட்டுச் சட்டங்கள் குறித்த வர்த்தமானி அறிவித்தல்கள் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு ஒப்பீட்டளவில் தீர்வு கண்டுள்ள நிலையில் பொருளாதாரம் மீட்சிப் பெறவில்லை என்று குறிப்பிடுபவர்களின் உளவியலை ஆராய வேண்டும். தேசிய கடன் மறுசீரமைக்கும் போது ஊழியர் சேமலாப நிதியத்துக்கும், இதர நிதியங்களுக்கும் பாதிப்பு ஏற்படும் என்பதை ஆரம்பத்தில் குறிப்பிட்டோம். பாரிய நெருக்கடிகளுக்கு மத்தியில் தேசிய கடன் மறுசீரமைக்கப்பட்டது.

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சிப் பெற்றதன் பின்னர் ஊழியர் சேமலாப நிதியத்துக்கான வட்டி வழங்கலை 12 அல்லது 13 சதவீதத்தால் அதிகரிக்க அரசாங்கம் கொள்கை ரீதியில் தீர்மானித்தது. ஆகவே பொருளாதார விவகாரத்தில் நாட்டு மக்களை தவறாக வழிநடத்துவதை எதிர்க்கட்சியினர் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

நாடு வங்குரோத்து நிலையடைந்ததன் பின்னர் உலக நாடுகள் அனைத்தும் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்கின. ஆனால், துரதிர்ஷ்டவசமான எதிர்க்கட்சிகள் ஒத்துழைப்பு வழங்கவில்லை. குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக குற்றச்சாட்டுக்களை மாத்திரமே முன்வைத்தனர். குறுகிய காலத்தில் இலங்கை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சிப் பெற்றுள்ளது என சர்வதேசம் குறிப்பிட்டுள்ளமை நாட்டின் நிதி நிலைபேறான தன்மையை உறுதிப்படுத்தியுள்ளது.

சர்வதேச கடன் மறுசீரமைப்பு தொடர்பில் இணக்கமான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இருதரப்பு மற்றும் வணிக கடன் வழங்குநர்களுடன் இறுதி இணக்கப்பாடு எட்டப்பட்டவுடன் சகல ஆவணங்களும் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும். கடன் மறுசீரமைப்பு விவகாரத்தில் நாட்டு மக்களுக்கு எதனையும் நாங்கள் மறைக்கவில்லை. வெளிப்படையாக செயற்பட்டுள்ளோம்.

- என்றார். (ஐ)

## பாராளுமன்ற...

பாராளுமன்றக் குழுத் தலைவராக தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவர் செல்வம் அடைக்கலநாதனை நியமிக்க வேண்டும் என்று அவரின் கட்சி சார்பில் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இந்தக் கோரிக்கைக்கு புளொட் தலைவர் த. சித்தார்த்தனும் ஆதரவு தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், இந்த விவகாரம் தொடர்பாக இலங்கை தமிழ் அரசு கட்சியின் தலைமைப் பணிமனையில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்றபோதே மாவை சேனாதிராசா மேற்கண்டவாறு கூறியிருந்தார்.

மேலும், பாராளுமன்றக் குழுத் தலைவர் விடயம் தொடர்பில் பிளவு ஏற்படாத வகையில் - ஒற்றுமையாக தீர்மானம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

## ஆசிரியர்களுக்கும்...

இதன்படி, சம்பள உயர்வு தரம் 3(ஐ) இல் உள்ள ஆசிரியர்களுக்கு 525 ரூபாய். தரம் 2(ஐ) இல் உள்ள ஆசிரியர்களுக்கு 1,335 ரூபாய், தரம் 1 இல் உள்ளவர்களுக்கு 1,630 ரூபாயும் வழங்கப்படவுள்ளன.

இந்த சம்பள உயர்வு அவர்களின் ஓய்வூதியத்தில் சேர்க்கப்படாது. சுகயீன விடுமுறை போராட்டத்தின்போது பணியில் இருந்த அனைவருக்கும் இதே அதிகரிப்பு வழங்கப்படும் - என்றும் அமைச்சர் கூறினார்.

இதேவேளை, கடந்த 8, 9ஆம் திகதிகளில் சுகயீன விடுமுறை போராட்டத்தில் ஈடுபடாத அரச அதிகாரிகளுக்கும் விசேட சம்பள அதிகரிப்பு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

(தொடர்புடைய செய்தி பக்கம் 2இல்)

## ஜனாதிபதி தேர்தலை...

குற்றச்சாட்டை முன்வைத்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

ஜனாதிபதியின் பதவிக்காலம் 5 ஆண்டுகள் என்பது அரசமைப்பில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனால் எவராவது சட்டத்துக்கு அப்பால் செயல்பட முற்பட்டால் அது நாட்டின் அடிப்படை சட்டமான அரசமைப்பை மீறுவதாகும். தேர்தல்கள் ஆணைக்குழுவால்கூட தேர்தலை ஒத்திவைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க முடியாது - அவ்வாறு முற்பட்டால் அது அரசமைப்பை மீறும் செயல்.

இது தொடர்பாக நீதிமன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால் தேவைப்படும் சந்தர்ப்பங்களில் பவ்ரல் அமைப்பு வழக்குகளில் முன்னிலையாகும். ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்க எவராவது முற்பட்டால் அதற்கு எதிராக பவ்ரல் அமைப்பு செயல்பட்டு மக்களுக்கு தேர்தல் உரிமையை பெற்றுக் கொடுக்கும்.

நாட்டில் பல தேர்தல்கள் பல கட்டங்களாக நடத்தப்பட்டுள்ளன. சில தேர்தல்கள் தொடர்ந்து நடத்தப்படாமலும் இருந்துள்ளன. ஆனால், ஜனாதிபதித் தேர்தலையும் பாராளுமன்றத் தேர்தலையும் ஒருபோதும் பிற்போட்டதில்லை - அதனை செய்ய முடியாது. அரசமைப்பில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான தெளிவான சட்ட ஏற்பாடுகள் உள்ளன. என்றாலும், ஜனாதிபதி மற்றும் பாராளுமன்ற தேர்தல்களை முன்கூட்டியே நடத்த முடியும் - பிற்போட முடியாது.

மக்கள் மத்தியில் தேர்தல் தொடர்பான நம்பிக்கையின்மையை ஏற்படுத்த சிலர் முற்படுகின்றனர். நீதிமன்றங்கள் மக்களின் உரிமைகளை பறிக்காது - பாதுகாக்கும் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது.

அமைச்சரவையில் நேற்று (நேற்று முன்தினம்) தீர்மானமொன்று எடுக்கப்பட்டுள்ளது. உயர்நீதிமன்றம் தெளிவான தீர்ப்பை வழங்கியுள்ள பின்புலத்தில் இவ்வாறான தீர்மானத்தை எடுக்கின்றனர். அதனை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து தேர்தலை ஒத்திவைக்கும் சூழ்ச்சிகள் நடைபெறலாம். ஆனால், அதற்கு ஒருபோதும் அனுமதி அளிக்கப்படாது. நீதிமன்றம் மக்களின் பக்கமே நின்று தீர்ப்பளிக்கும்." - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# மலேசியாவில் கல்வி பயிலும் இலங்கையருக்கு 4 வருட வீசா



கொழும்பு, ஜூலை 11

மலேசியாவுக்கு அதிகாரப்பூர்வ பயணம் மேற்கொண்டுள்ள கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மலேசியா உயர் கல்வி அமைச்சர் ஷாம்ப்ரி அப்துல் காதிரை சந்தித்து இலங்கைக்கும் மலேசியாவுக்குமான கூட்டுத்திட்டம் குறித்து கலந்துரையாடினார்.

மலேசியாவில் உயர்கல்வி கற்கும் 3800 இற்கும் மேற்பட்ட இலங்கை மாணவர்கள் தற்போதைய சட்டத்தின் படி ஒவ்வொரு இரண்டு வருடங்களுக்கும் இலங்கைக்கு திரும்பி விசாவைப் புதுப்பிக்கும் நிலை காணப்படுகிறது.

அதனால் அவர்களின் பட்டப்படிப்பை நிறைவு செய்யும் காலமான 4 வருடங்களுக்கு விசா காலத்தை அதிகரித்து தருமாறு மலேசியா உயர் கல்வி அமைச்சர் ஷாம்ப்ரி அப்துல் காதிரிடம் ஆளுநர் வேண்டுகோள் விடுத்தார்.

ஆளுநரின் வேண்டுகோளுக்கு இணங்க அமைச்சர் ஷாம்ப்ரி அப்துல் அதற்கான நடவடிக்கையை மேற்கொள்வதாக தெரிவித்தார்.

மேலும் இலங்கையில் இருந்து மலேசியாவிற்கு செல்லும் மாணவர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு மலாய் மொழிக்கான பயிற்சியை இலங்கையில் ஆரம்பிப்பது குறித்து கலந்துரையாடப்பட்டதுடன், மலேசியாவிற்கும் இலங்கைக்குமான கல்வி தொடர்பான கூட்டு பரிமாற்ற திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன.

# போலி மலேசிய கடவுச்சீட்டுடன் தெல்லிப்பழை வாசி சிக்கினார்!

கொழும்பு, ஜூலை 11

போலி மலேசியக் கடவுச்சீட்டுடன் ஆஸ்திரியாவுக்கு செல்ல முயன்ற இலங்கையர் ஒருவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணம் - தெல்லிப்பழையைச் சேர்ந்த 39 வயதுடைய ஒருவரே இவ்வாறு குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட நபர் இந்தியாவின் புதுடில்லிக்கும், அங்கிருந்து ஆஸ்திரியாவின் வியன்னாவுக்கும் செல்ல திட்டமிட்டிருந்ததாகத் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர் சுமார் 90 இலட்சம் ரூபாவை செலவிட்டு போலி கடவுச்சீட்டைத் தயாரித்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். (அ)

# வீதியை விட்டு விலகிய வாகனம் துணுக்காயில் ஒருவர் உயிரிழப்பு!

முல்லைத்தீவு, ஜூலை 11

முல்லைத்தீவு - துணுக்காய் பகுதியில் நேற்று முன்தினம் வாகனம் ஒன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்தார்.

கொல்லவிளாங்குளம் - வவுனிக்குளம் பகுதியைச் சேர்ந்த 48 வயதுடைய சின்னத்துரை பாஸ்கரன் என்பவரே விபத்தில் உயிரிழந்தார்.

காரின் ரயர் வெடித்ததால், சாரதியால் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் வீதியை விட்டு வாகனம் விலகியதில் விபத்து ஏற்பட்டுள்ளது.

இதேவேளை வாகனத்தில் பயணித்த மேலும் இருவர் காயமடைந்த நிலையில் சிகிச்சைகளுக்காக கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மல்லாவி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# பொதுமக்கள் நலன், பாதுகாப்புக்கு தேவையான புதிய சட்டம் விரைவில்!

## அவதானம் செலுத்துகிறது அமைச்சரவை

கொழும்பு, ஜூலை 11

**சுகாதாரம், கல்வி போன்ற அடிப்படை மனித தேவைகளை பூர்த்தி செய்வது தொடர்பான விடயங்களுக்கு இடையூறு ஏற்படுவதைத் தடுப்பதற்காக, பொது மக்களின் நலன் மற்றும் பாதுகாப்புக்கு தேவையான புதிய சட்டத்தை உருவாக்குவது குறித்து அமைச்சரவை கவனம் செலுத்தியதாக அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.**



நியாயமற்ற கோரிக்கைகளை முன்வைத்து, வேலை நிறுத்தம் உள்ளிட்ட சீர்குலைவு நடவடிக்கைகளை மேற்கொண்டு நாட்டின் நிராயுதபாணியான அப்பாவி பாடசாலை மாணவர்களையும் வைத்தியசாலைகளில் உள்ள இலட்சக்கணக்கான நோயாளர்களையும் ஏனைய பொதுச் சேவைகளில் உள்ள பொது மக்களையும் அசௌகரியத்துக்கு உள்ளாக்காது, பாதுகாப்பது பொறுப்பும் கடமையுமாக இலங்கை அரசாங்கம் கருதுவதாக அமைச்சர் மேலும் கூறினார்.

நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அமைச்சர் இந்தக் கருத்துக்களை தெரிவித்தார்.

அனைத்து அரசு ஊழியர்களும் வரி செலுத்துவோரின் பணத்திலேயே ஊதியம் பெறுகிறார்கள் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் பாராளுமன்றத்தில் அமைச்சரவை கூடிய போது, இந்த பாரிய வேலை நிறுத்தப் போராட்டம் பற்றி நிறையப் பேசப்பட்டது.

மக்கள் எதிர்நோக்கும் கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்து வரவு-செலவுத் திட்ட ஆவணம் இந்த நாட்டின் அன்றாட அலுவல்களை நடத்துவதற்கு போதிய அரச வருமானம் இன்றி மிகவும் பயனுள்ள மற்றும் திறமையான முறையில் பணத்தை ஒதுக்கியுள்ளவேளையில், இந்த வருடத்தில் அனைத்து அரசாங்க ஊழியர்களுக்கும் 10,000 ரூபா சம்பளம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்பதை அனைத்து அமைச்சரவை அமைச்சர்களும் மிகத் தெளிவாகச் சுட்டிக்காட்டினர்.

அதைவிட அதிகமான நிதித் தொகையை வழங்குவதற்கு இலங்கை அரசிடம் எந்த அமைப்பும் இல்லை. ஏனெனில் 20,000 ரூபாவால் சம்பளத்தை அதிகரிக்க வேண்டுமானால் அதற்கு மேலதிகமாக 400 பில்லியன் ரூபா தேவைப்படுகிறது.

இந்த கூடுதல் தொகையை வழங்க, குறைந்தபட்சம் வட் வரியை 21 வீதமாக உயர்த்த வேண்டும். ஏனெனில் அனைத்து அரசு ஊழியர்களின் சம்பளம், ஓய்வூதியம், மானியம், வட்டி போன்றவற்றை ஈடுகட்ட போதுமான அரசு வருவாய் இல்லை.

அனைத்து அரசு ஊழியர்களுக்கும் வரி செலுத்துவோரின் பணத்தில் ஊதியம் வழங்கப்படுகிறது.

இந்த பாரிய அழுத்தத்திற்கு உள்ளான மக்கள் மீதான வரியை அதிகரிப்பதற்கு அரசாங்கத்திற்கு இடமில்லை என ஜனாதிபதி வலியுறுத்தினார்.

நிதியமைச்சின் திறைசேரியின் செயலாளரும் இவ்வாறான சம்பள அதிகரிப்பை வழங்குவதற்கு இந்த வருடத்தில் நிதி ஒதுக்கீடு இல்லை என மிகத் தெளிவாக விளக்கமளித்துள்ளார்.

வேலை நிறுத்தத்தால் பாடசாலைகள் மூடப்பட்டதால், இன்று ஏராளமான குழந்தைகள் பாடசாலை கல்வி உரிமையை இழந்துள்ளனர்.

இவ்வாறானதொரு சூழ்நிலையில், பொதுச் சேவைகளைப் பேணுவதற்கான பொறுப்பு பெரிதும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது.

அரசியல் நலன்களின் அடிப்படையிலான வேலைநிறுத்தங்களால் அவர்களுக்கு ஏற்படும் அனைத்து மோசமான விடயங்களையும் கவனத்தில் கொண்டு, கல்வி மற்றும் சுகாதாரம் போன்ற அடிப்படை மனித தேவைகளை பூர்த்தி செய்வது தொடர்பான சேவைகளுக்கு இடையூறு ஏற்படுவதைத் தடுக்க தேவையான புதிய சட்டத்தை அமைச்சரவை உருவாக்கியுள்ளது.

அத்துடன், பிள்ளைகளின் கல்வியை இழப்பது போன்ற பொதுச் சேவைகளைப் பெறுவதற்கு இடையூறு விளைவிப்பவர்களுக்கு எதிராக சில சட்டபூர்வ வழிகளைப் பெறுவதற்கான சட்ட வரைவுகளைத் தயாரிக்க முடியும் எனவும் சட்டமா அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே எதிர்காலத்தில் இந்நாட்டில் பொதுச் சேவைகளைப் பெற்றுக் கொள்ளும் பொதுமக்களின் நலனுக்காகவும் ஏனைய பொதுமக்களின் நலனுக்காகவும் சிறுவர்களைப் பாதுகாக்கும் சட்டங்கள் உருவாக்கப்படும்-என்றார். (அ)

# அத்தியாவசிய உணவுப் பொருள் சிலவற்றின் விலைகள் குறைப்பு!

கொழும்பு, ஜூலை 11

அத்தியாவசிய உணவுப் பொருட்கள் சிலவற்றின் விலைகள் குறைக்கப்படுவதாக லங்கா சதொச நிறுவனம் அறிவித்துள்ளது.

நேற்று முன் தினம் முதல் குறித்த விலை குறைப்பு அமுலுக்கு வந்துள்ளதாகவும், வர்த்தகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனையின்படி இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, பயறு ஒரு கிலோகிராமின் விலை 998 ரூபாவாகவும், இறக்குமதி செய்யப்பட்ட உருளைக்கிழங்கு ஒரு கிலோகிராமின் விலை 205 ரூபாவாகவும், சிவப்பு சீனி ஒரு கிலோகிராமின் விலை 375 ரூபாவாகவும், வெள்ளை சீனி ஒரு கிலோகிராமின் விலை 263 ரூபாவாகவும் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, முட்டை மீதான வற் வரியை அரசாங்கம் நடைமுறைப்படுத்தினால் உள்ளூர் முட்டைகளின் விலை அதிகரிக்குமென அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர் சங்கத்தின் செயலாளர் ரட்ணசிறி அழகக்கோன் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# மின்சாரக் கட்டண திருத்தம் விரைவில் இறுதித் தீர்மானம்

கொழும்பு, ஜூலை 11

மின்சாரக் கட்டணத் திருத்தம் தொடர்பில் பொது மக்களின் கருத்துக்களை ஆராய்ந்த பின்னர் இம்மாதம் 15 ஆம் திகதி இறுதித் தீர்மானம் அறிவிக்கப்படுமென பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அண்மையில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் மின்சாரக் கட்டணத் திருத்தங்கள் தொடர்பான முன்மொழிவுகளை இலங்கை மின்சார சபை, பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்தது. குறித்த முன்மொழிவுகளின்படி, குறைக்கப்படும் கட்டணங்களின் ஒட்டுமொத்த சதவீதம் 13.8 வீதம் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, குடும்ப அங்கத்தவர்களின் கட்டணத்தில் 25.5 வீதமும், மத மற்றும் தொண்டு நிறுவனங்களின் கட்டணத்தில் 3 வீதம் குறைக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 11.07.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.